விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

**கல்யாண மாலை**
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= 

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 294 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி 22 செவ்வாய்க்கிழமை (08.10.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியில் களமிறங்குகிறார் சசிகலா ரவிராஜ்




(யாழ்ப்பாணம்)

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் சங்குச் சின்னத்தில் மாமனிதர் ரவிராஜின் மனைவி சசிகலா ரவிராஜ் போட்டியிடவுள்ளார்.

தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவில் நேற்றுத் திங்கட்கிழமை சசிகலா ரவிராஜ் கையொப்பம் இட்டுள்ளார்.

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் தமிழரசுக் கட்சியில் போட்டியிட்ட நிலையில் இம்முறை தமிழரசுக் கட்சி அவருக்கு ஆசனம் வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7)

## இலங்கைக்கு மேலும் 200 மில்லியன் வழங்கும் உலக வங்கி



10

## தமிழரசுக் கட்சிக்குள்ளே தொடரும் உட்கட்சிப் பூசல்

### ஊடக சந்திப்பை புறக்கணித்த சிறீதரன்



(வவுனியா)

பாராளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழரசுக் கட்சிக்குள்ளே உட்கட்சிப் பூசல் அதிகரித்துள்ளதாகத் தெரியவருகின்றது.

எம்.ஏ.சுமந்திரன் தலைமையிலான ஊடக சந்திப்பை சிறீதரன் புறக்கணித்தமை பேசு பொருளாகியுள்ளது.

(15ஆம் பக்கம் பார்க்க)

### தும்பளைக் கடலில்
## கட்டுமரம் புரண்டதில் மீனவர் உயிரிழப்பு

(கரணவாய்)

தும்பளைக் கடற்பரப்பில் கட்டுமரம் புரண்ட தில் மீனவர் ஒருவர் 15

### வர்த்தமானியில்
## கட்சிகளின் சின்னங்கள்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்த லில் போட்டியிடவுள்ள அரசி யல் கட்சிகளுக்கு வழங்கப் பட்டுள்ள சின்னங்கள் தேர் தல்கள் ஆணைக்குழுவினால் வர்த்தமானியில் பிர சுரிக்கப்பட்டுள்ளது. 15

## தேர்தலில் 6 கட்சிகள் போட்டியிட முடியாது
### தேர்தல்கள் ஆணைக்குழு

(கொழும்பு)

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளாக வேட்பு மனுத் தாக்கல் செய்ய முடி யாத அரசியல் கட்சிகளை தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட புதிய வர்த்த மானியின்படி, கட்சி யின் செயலாளர் 15

## கட்சிப் பதவிகளை துறக்கிறார் மாவை?

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைமைப் பதவி உள்ளிட்ட அனைத்துப்பொறுப் புக்களிலிருந்தும் விலகுவ தாக, மாவை சேனாதிராசா அறிவித்துள்ளார் எனத் தெரி விக்கப்படுகிறது.

கட்சியின் பதில் பொதுச் செயலாளருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் இதனைத் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத் தேர்தலுக்கான வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் குழு நியமிக்கப்பட்டதும், மாவை சேனாதிராசாவுக்குத் தெரியாமல் நடந்துள்ளது.

கட்சிக்குள் தலைவரை ஓரம் கட்டி, சுமந்திரன் அணி 15



## இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுத் தலைவர்
### பதவி விலகினார்

(கொழும்பு)

இலஞ்ச ஊழல் விசா ரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் கனிஷ்க விஜேரத்ன தனது இராஜினா மாக் கடிதத்தை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க விடம் கையளித்துள்ளார்.

நேற்றுப் பிற்பகல் 3.00 மணிக்குத்தனது இராஜினாமாக் கடிதத்தை ஜனாதிபதியிடம் கையளிப்பதாக நீதிமன்றினால் நடத்தப்பட்ட விசா ரணையின் போது 15

### குற்றப் புலனாய்வு
## பணிப்பாளர் பதவிக்கு பெண் அதிகாரி முன்மொழிவு

(கொழும்பு)

இலங்கை பொலிஸ் வர லாற்றில் முதல் தடவையாகக் குற்றப் புலனாய்வுத் திணைக் களத்தின் பணிப் பாளர் பதவிக் 15

### மின் ஒழுக்கினால்
## பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் தீ பரவல்

(கரணவாய்)

மின் ஒழுக்கினால் பருத் தித்துறைப் பிரதேச செயலகத் தில் தீ பரவல் ஒன்று ஏற்பட்டி ருந்தது.

துரிதமாகச் செயற்பட்டதன் மூலம் பெரும் அனர்த்தம் தவிர்க்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறையில் உள்ள பிரதேச செயலகத்தில் நேற்று திங்கட்கிழமை மாலை இத் தீ பரவல் சம்ப 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்




இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 28ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவில் கலைமாணி (BA.Hons) பட்டத்தினைப் பெற்ற எமது நிறுவன பயிலுநர்

**செல்வி நிசாந்தி ரவிச்சந்திரன்**

அவர்களை அகமகிழ்ந்து பாராட்டி அவர் இப்பாரினில் மேன்மேலும் பல பட்டங்களையும் பதவிகளையும் பெற வாழ்த்துகின்றோம்.

வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம் (VOGT)
அல்வாய்.

(C-1355)

# நெல்லியடி இளைஞன் பிரான்சில் மர்ம மரணம்



நெல்லியடி இளைஞன் ஒருவர் பிரான்ஸில் மர்மமான முறையில் மரணமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில் நெல்லியடி வதிரி இரும்புமதவடி பகுதியைச் சேர்ந்த யோகேஸ்வரன் சிந்துஜன் (வயது 28) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

ஐந்து வருடங்களுக்கு முன்னர் பிரான்ஸ் நாட்டுக்கு சென்ற குறித்த இளைஞர் தொழில் புரிந்து வந்துள்ளார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார்.

கொலையா? அல்லது தற்கொலையா? என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,60)

# பாராளுமன்றத் தேர்தலில் ஊடகவியலாளர் லோஷன்

(கொழும்பு)

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் தமிழ் முற்போக்கு கூட்டணியின் சார்பில் ஊடகவியலாளர் லோஷன் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடவுள்ளார்.

தமிழ் முற்போக்கு கூட்டணியினால் நேற்று (07) கொழும்பில் நடாத்தப்பட்ட ஊடக சந்திப்பில் அக்கட்சியின் தலைவர் மனோ கணேசன் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

அத்துடன், கொழும்பில் நடைபெற்ற அரகலய போராட்டத்தில் தமிழ் மக்களின் சார்பில் லோஷன் பங்களித்ததாகவும் மனோகணேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, புதிய அரசாங்கம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த அவர், ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவார் என தான் நம்புவதாகவும் தெரிவித்துள்ளார். (ம-7)

# கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலக வல்வெட்டித்துறை சமுர்த்தி வங்கியில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் திருமதி அன்ரன் மைக்கல் ரஜினி அவர்களுடைய அன்புத் தந்தையார்

**அமரர் சின்னத்துரை குணலிங்கம்**

அவர்கள் 04.10.2024 அன்று காலமாகி விட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவுத்துயருடன்... பிரதேச செயலாளரும்,
அனைத்து உத்தியோகத்தர்களும்,
ஊழியர் நலன்புரிச் சங்கம்,
பிரதேச செயலகம், பருத்தித்துறை.

தோற்றம் 29.05.1940 மறைவு 04.10.2024

(C-1351)

# பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் சடலமாக மீட்பு

(கொழும்பு)

ஜா-எல பகுதியிலுள்ள சதுப்பு நிலமொன்றிலிருந்து பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் 50 வயதுடைய கான்ஸ்டபிள் ஒருவரெனத் தெரிய வந்துள்ளது.

இவர் தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் கடுவலை இடைமாறல் பகுதியிலுள்ள காவலரணில் கடமையாற்றி வந்தவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7)

# மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 01 - 04 - 1950 | 06 - 10 - 2024 |

## ஜெகசோதி தாமோதரம்பிள்ளை

அன்னங்கை, கோண்டாவில் வடக்கு, கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வற்றாப்பளை, முள்ளியவளையை வசிப்பிடமாகவும் கொண்ட ஜெகசோதி தாமோதரம்பிள்ளை அவர்கள் 06.10.2024 அன்று காலமானார்.

அன்னார் அழகம்மா - கந்தையா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கந்தையா தாமோதரம்பிள்ளை(இளைப்பாறிய அதிபர், கொக்குத்தொடுவாய் மகா வித்தியாலயம்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான மலர்சோதி(கனடா), பெருந்தவராசா(UK) மற்றும் அருமைதவராசா(ஜேர்மனி), இந்திராணி(யாழ்ப்பாணம்), தேவராணி (யாழ்ப்பாணம்), அன்னராணி(யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான பரமலிங்கம், நாகரட்ணம், புவனேஸ்வரி மற்றும் தெய்வேந்திரம்(யாழ்ப்பாணம்), மகேஸ்வரி, பரமேஸ்வரி, சரஸ்வதி ஆகியோரின் அன்பு மைத்துனியும் சுதர்சன்(UK), சுதர்சினி(வற்றாப்பளை), சுகந்தன்(UK), சுகந்தினி(கனடா) காலஞ்சென்ற சுஜிந்தன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் பிரியா, தயானந்தன், கனகேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியும் பௌதிகன், அனோஸ், பருனியா, அமோலிக்கா, அருஷ், மிதுஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை 09.10.2024 புதன்கிழமை காலை 7 மணியளவில் வற்றாப்பளையில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நாவல்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சுதர்சினி : + 94 77 887 7058 சுகந்தன் : +447535422390
சுதர்சன் : +447825751407 சுகந்தினி : +1(613)4139879

தகவல்: குடும்பத்தினர்

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த 09.09.2024 திங்கட்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்ப விளக்கு

## அமரர் நாகலிங்கம் செல்வராணி

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 09.10.2024 புதன்கிழமை காலை 04.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று அஸ்தி கீரிமலை புனித தீர்த்தக்கரையில் கரைக்கப்படும். அதனைத் தொடர்ந்து அன்னாரது இல்லத்தில் மதியம் 12.00 மணியளவில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

(C-1354)

தூதாவளை,
கரணவாய், கரவெட்டி.

இங்ஙனம் : குடும்பத்தினர்
077 600 8213

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொத்து மற்றும் கடன் விபரங்களை வேட்புமனுவுடன் சமர்ப்பிக்க வேண்டும்

## வேட்பாளர்களுக்கு விசேட அறிவிப்பு

(கொழும்பு)

**எதிர்வரும் நவம்பர் 14, அன்று நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களும், 2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க ஊழல் தடுப்புச் சட்டத்தின்படி சொத்துக்கள் மற்றும் கடன்கள் குறித்த அறிக்கைகளை சமர்ப்பிக்க வேண்டும் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.**




தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க விடுத்துள்ள அறிக்கையில், அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்களின் வேட்பாளர்கள் தமது சொத்துப் பிரகடனங்களை வேட்புமனுவுடன் சமர்ப்பிக்க வேண்டும் என கூறப்பட்டுள்ளது.

இதேவேளை, தேசியப் பட்டியல் வேட்புமனுக்களை கோருபவர்களும் தமது சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பான அறிக்கைகளை சமர்ப்பிக்க வேண்டும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (நி)

# முட்டை விலை குறைவது பாதக நிலையை உருவாக்கும்

## விவசாய அமைச்சு எச்சரிக்கை

(கொழும்பு)

முட்டை விலை குறைவதானது உற்பத்தியாளர்களுக்கு பாதக நிலையை உருவாக்கும் என விவசாய அமைச்சின் செயலாளர் எம்.வீ நிசாந்த விக்ரமசிங்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.

முட்டை ஒன்றின் விலை 36 முதல் 37 ரூபாவை விடவும் குறைந்தால் அது முட்டைகைத்தொழிற்துறையில் தாக்கத்தை ஏற்படுத்தும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கோழித் தீனியின் விலையை குறைப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து தற்பொழுது ஆராயப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

கோழித் தீனியின் விலை குறைக்கப்பட்டதன் பின்னர் முட்டை ஒன்றின் விலையை 29 முதல் 30 ரூபா அளவில் குறைக்க முடியும் என தெரிவித்துள்ளார்.

முட்டை ஒன்றை உற்பத்தி செய்வதற்கு 32 முதல் 33 ரூபா செலவாகின்றது எனவும் இதில் அதிகளவு தொகை கோழித் தீனி வகைகளுக்காக செலவிடப்படுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

கோழித்தீனியின் விலைகள் சோளத்தின் விலையில் கூடுதலாக தங்கியுள்ளது என தெரிவிக்கப்படுகின்றது. (நி)

# 307 பொலிஸாருக்கு திடீர் இடமாற்றம்

(கொழும்பு)

ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவில் இருந்து நாடு முழுவதும் உள்ள பல்வேறு பொலிஸ் பிரிவுகளுக்கு உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் 307 பொலிஸார் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

பொதுச் சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளின் 258(I) மற்றும் (II) இன்படி தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஒப்புதலின் கீழ் இந்த இடமாற்றங்கள் பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரியவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.பணியிட மாற்றம் செய்யப்பட்டவர்களில் 11 தலைமை ஆய்வாளர்கள், 5 ஆய்வாளர்கள், 38 சப்-இன்ஸ்பெக்டர்கள் மற்றும் 12 பெண் சப்-இன்ஸ்பெக்டர்கள் உள்ளனர்.

இதேவேளை, ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவில் தற்காலிகமாக கடமையாற்றிய 24 பொலிஸாரின் இடமாற்ற உத்தரவு இரத்து செய்யப்பட்டுள்ளது. (நி)

# வரி அறவீடு ஆரம்பம்

## உள்நாட்டு இறைவரி திணைக்களம்

(கொழும்பு)

2023-2024 நிதியாண்டுக்கான வரி செலுத்தாதவர்களின் வீடுகளுக்கு சென்று வரி அறவிடும் நடவடிக்கை நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக உள்நாட்டு இறைவரி திணைக்களம் தெரிவித்துள்ளது.

செப்ரெம்பர் மாதம் 30 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் 1417 பில்லியன் ரூபா வரி அறவிடப்பட்டுள்ளதாக உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் சேபாலிகா சந்திரசேகர தெரிவித்துள்ளார்.

குறித்த தொகையானது 2024 ஆம் ஆண்டுக்கான வருமான இலக்கின் 70 வீதமாகும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

2023 -2024 நிதியாண்டுக்கான அனைத்து வருமான வரி நிலுவையினையும் செலுத் துவதற்கு நேற்று வரை கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் எவரேனும் ஒருவர் வரி செலுத்த தவறுவாராயின் அல்லது தாமதமாக செலுத்தப்படுகின்ற வருமான வரிக்கு சட்டத்தின் அடிப்படையில் நடவடிக்கை அல்லது மேலதிக வட்டி அறவிடப்படும் எனவும் உள்நாட்டு இறைவரி திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை இந்த விடயம் தொடர்பாக 1944 என்று துரித எண்ணுக்கு அழைப்பினை ஏற்படுத்துவதன் மூலம் மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (நி)





SLIC - 2024 உலக குழந்தைகள் தினத்தில் பிறந்த குழந்தைகளின் பெற்றோருக்கு 1 மில்லியன் ரூபா இலவச ஆயுள் காப்பீடு வழங்கும் திட்டத்தில் ஒக்டோபர் 1 ஆம் திகதி பிறந்த குழந்தையின் பெற்றோருக்கு 1 மில்லியன் பெறுமதி வாய்ந்த இலவச ஆயுள் காப்புறுதியை வழங்கியுள்ளனர்.

சமிந்த அதாவுட (பிரதி பொது முகாமையாளர்), ஜகத் வெல்கம (பிரதி பொது முகாமையாளர்), கசுன் சமீர (உதவி பொது முகாமையாளர்), தயாரட்ன பெரேரா (பிரதம அதிகாரி), சந்தன எல்.அளுத்கம (குழும பிரதம நிறைவேற்று அதிகாரி) , வைத்தியர் அஜித் தந்தநாராயண (பணிப்பாளர்-காசல் வீதி, பெண்கள் வைத்தியசாலை), கே.ஜி.புஷ்பகாந்தி (காசல் வீதி, பெண்கள் வைத்தியசாலை மற்றும் துலிகா விஜேசேகர விடுதி) வைத்திய மாது- (காசல் வீதி, பெண்கள் வைத்தியசாலை) ஆகியோரை படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்


## வூசோ குத்துச் சண்டைப் போட்டியில் முல்லைத்தீவுக்கு இரு பதக்கங்கள்



அகில இலங்கை பாடசா லை களுக்கு இடையிலான வூசோ குத்துச் சண்டை போட்டியில் முல்லைத்தீவு மாணவர்கள் இருவர் தங்கம் மற்றும் வெண கலப் பதக்கங்களை வென்று சாதனை படைத்துள் ளனர்.

அகில இலங்கை பாட சாலை களுக்கு இடையிலான வூசோ குத்துச் சண்டைப் போட்டிகள் கடந்த 4, 5, 6 ஆம் திகதிகளில் கண்டி உள்ளக விளை யாட்ட ரங்கில் நடைபெற்றன.

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மாணவி ஜீட் வசீகரன் டிவோன்சி 18 வயதுக்குட்பட்ட 60-65 Kg எடைப் பிரிவில் தங்கப் பதக்கத் தினையும், முல் லைத் தீவு மகா வித்தியாலய மாணவன் நாகேஸ்வரன் கோபிகன் 20 வயதுக்குட்பட்ட 70-75Kg எடைப்பிரிவில் வெண்கலப் பதக்கத்தினையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக் கது. (6-299)



## விராட் கோலியின் சாதனையை முறியடித்த ஹர்த்திக் பாண்டியா



இந்தியா- பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான முதல் ரி-20 போட்டி நேற்று முன்தினம் மத்திய பிரதேச மாநிலம் குவாலியரில் நடை பெற்றது. முதலில் விளை யாடிய பங்களாதேஷ் அணி 19.5 ஓவரில் 127 ரன்கள் எடுத்து ஒல் அவுட் ஆனது. பின்னர் இந்தியா 11.5 ஓவரில் சேஸிங் செய்து 7 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இந்திய வீரர் ஹர்திக் தொடக்கம் முதல் அதிரடி ஆட் டத்தை வெளிப் படுத் தினார். அவர் 16 பந்தில் 5 பவுண்டரி, 2 சிக்சருடன் 39 ரன்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இதற் கிடை டயே ஹர்திக் சிக்ஸ் அடித்து அணியை வெற்றி பெற வைத் தார்.

இப்படி ஐந்தாவது முறை யாக சிக்ஸ் அடித்து அணியை வெற்றி பெற வைத்துள்ளார்.

இதற்கு முன்ரி-20 கிரிக்கெட் போட்டியில் விராட் கோலி 4 முறை இவ்வாறு செய்துள் ளார். தற்போது ஹர்திக் 5ஆவது முறையாக வெற்றி பெற வைத்து முதல், இந்திய அணியை சிக்ஸ் அடித்து அதிகமுறை வெற்றி பெற வைத்த முதல் இந்திய பட்ஸ்மேன் என்ற பெரு மையை பெற்றுள்ளார். (6)

## facebook ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3238

விதுஷா




மிதிலா





கார்த்திக்




சஞ்சய்




அனுபா




தீபன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் முழுமையான ஆதரவு எமக்கு கிடைக்கும்

## தேசிய மக்கள் சக்தி நம்பிக்கை

**(கொழும்பு)**

**எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்களின் அமோக ஆதரவு தேசிய மக்கள் சக்தியினருக்கு கிடைக்கும் எனவும் அதன்மூலம் மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலத்தைப் பெற முடியும் என்ற நம்பிக்கை உள்ளதாகவும் தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக் குழு உறுப்பினரான சட்டத்தரணி சுனில் வட்டகல தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், "எமது தலைவர் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க எளிமையானவர். தனது நடத்தை மூலம் அவர் அதனை உறுதிப்படுத்தி வருகின்றார். மக்கள் எமக்கு வழங்கியுள்ள பொறுப்பு உரிய வகையில் நிறைவேற்றப்படும்.

ஜனாதிபதித் தேர்தலின்போது வடக்கு, கிழக்கில் இருந்து எமக்கு விழாத வாக்குகள் பாராளுமன்றத் தேர்தலில் கிடைக்கும் என உறுதியாக நம்புகின்றோம். அந்த ஆதரவுடன் மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலம் கிட்டும் என எதிர்பார்க்கின்றோம்.

தேசிய மக்கள் சக்தியினர் இனவாதிகள் அல்லர். அனைவருக்கும் சம உரிமை வழங்கி, இலங்கையர்கள் என்ற நாமத்தை தேசிய மக்கள் சக்தியால் தான் காக்க முடியும் என்பது மக்களுக்கு தெரியும்.

எனவே ஜனாதிபதித் தேர்தலின் போது தமிழ், முஸ்லிம் மக்களிடமிருந்து கிடைக்கப் பெற்ற வாக்குகள் பாராளுமன்றத் தேர்தலில் நிச்சயம் இரட்டிப்பாகும் எனவும் தெரிவித்தார். (நி)

# விலகியவர்கள் எம்முடன் இணையுங்கள் மொட்டுவை அழைக்கும் சீலரத்னதேரர்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மற்றும் ரணிலுடன் இருந்து விலகியவர்கள் அனைவரையும் தம்முடன் இணையுமாறு ஜனசேத பெரமுனவின் தலைவர் பத்தரமுல்ல சீலரத்ன தேரர் அழைப்பு விடுத்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளன.

ஜனசேத பெரமுன கட்சியின் அலுவலகத்தில் நாடளாவிய ரீதியிலான ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் போட்டியிடும் வேட்பாளர்கள் வேட்பு மனுக்களில் கையொப்பமிடப்பட்டனர்.

இதன்போது கட்சியின் தலைவர் பத்தரமுல்ல சீல ரதன தேரர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் இன்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி துண்டு துண்டாக உடைந்து கிடக்கிறது. தேர்தல் ஆணைக் குழுவால் வேட்புமனுக்கள் கூட கொடுக்க முடியாத நிலையில் உள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுக்கு செல்ல இடமில்லை என்றால் ஜனசெத பெரமுனவின் தேர்தல் பிரசாரத்திற்கு வருமாறு அழைப்பு விடுக்கின்றேன்.

பொதுஜன பெரமுன மற்றும் ரணிலுடன் இருந்து விலகியவர்கள் அனைவரையும் எம்முடன் இணையுமாறு கேட்டுக்கொள்கின்றேன். (நி)


## University of Jaffna-SriLanka
### Faculty of Graduate Studies

**Calling for Expression of Interest (EOI) for Visiting Resource Persons**

**Faculty of Graduate Studies, University of Jaffna**

1. **Master of Education Programme – Jaffna & Vavuniya Regional Centre**
2. **Postgraduate Diploma in Education – Vavuniya Regional Centre**

Applications are invited from the eminent scholars who fulfill the following requirements to undertake the position as Visiting Lecturer to teach the Master of Education Programme, Postgraduate Diploma in Education programme.

**Qualifications:**

1. A First or Second Class Honors degree in the relevant field.

   Or

   General /Special degree with Postgraduate Diploma in Education/Master of Education.

   **And**

2. Master of Philosophy (MPhil)/Doctor of Philosophy (PhD) degree in Education.

   **And**

3. Not less than **five** years of experience in one or more of the following:
   I. Teaching at University Level.
   II. Professional Experience in teaching for Postgraduate Studies.

   **And**

4. Book Publications in the relevant field.
5. Research publications in the relevant field.

Interested eminent scholars with the required qualifications are expected to send their **self-prepared application along with Curriculum Vitae (CV)** and the **certified copies of the Educational and Professional Qualifications** to the Dean, Faculty of Graduate Studies, University of Jaffna on or before **25.10.2024.**

**Note:- Please specify your willingness for teaching of the course units for Master of Education and Postgraduate Diploma in Education separately in your order of preferences.**

**Please visit our websites (www.jfn.ac.lk / www.grad.jfn.ac.lk) regarding the form annexure.**

Contact us on 021 222 3608 for any clarifications.

Registrar

(சி-1349)


# இராசிபலன்

08.10.2024
புரட்டாதி 22, செவ்வாய்க்கிழமை
பஞ்சமி முற்பகல் 7.59 மணிவரை
கேட்டை பின்னிரவு 1.29 மணிவரை
சுபநேரம் 10.32-12.02 மணிவரை
இராகுகாலம் 3.02-4.32 மணிவரை
சஷ்டி விரதம்
சந்திராஷ்டமம்: அச்சுவினி, பரணி

வளவன்

**மேஷம்** — ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், கொடுக்கல் வாங்கல்களில் நிதானம் தேவை; விரயங்கள் கூடும், வேலைச்சுமை கூடும், பிரயாண பயமுண்டு.

**ரிஷபம்** — உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மிதுனம்** — சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், நன்மைகள் நடைபெறும் நாள், கனவுப் பலிதமுண்டு, வியாபார விருத்தியுண்டு.

**கடகம்** — பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், தன்னம்பிக்கை அதிகரிக்கும், மற்றவர்கள் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், உறவினர் பகை மாறும்.

**சிம்மம்** — வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, சுப செய்திகள் வந்து சேரலாம், வாகன சுகமுண்டு.

**கன்னி** — உயர்வான சிந்தனைகள் மனதில் தோன்றும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வழிபாடு முன்னேற்றம் தரும், பொருளாதார நிலையில் முன்னேற்றமுண்டு.

**துலாம்** — புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம், சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்** — உறவினர் பகை அகலும், ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், முன்னேற்றம் கூடும் நாள், கற்பனை மிகுதியான நாள்.

**தனுசு** — கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது, செய்தொழிலில் சில மாற்றங்கள் ஏற்படலாம், வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும்.

**மகரம்** — இறைவழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், பலரது அன்பிற்கும் பாத்திரமாவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், காரிய அனுகூலமுண்டு.

**கும்பம்** — வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், பயணங்கள் எண்ணியபடி கைகூடும், திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.

**மீனம்** — எதிர்காலம் குறித்து முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், குடும்பத்தில் நிலவிய குழப்பங்கள் அகலும், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு.

**பிறப்பால் அனைவரும் ஒன்று ஆனால் ஒழுக்கத்தால் உயர்கின்றோம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதையல் அகழ்வில் ஈடுபட்ட நான்கு பேர்

## கைதாகி சரீரப்பிணையில் விடுவிப்பு

(நெளுக்குளம்)

புதுமாத்தளன் சாலைப் பகுதியில் கடந்த சனிக்கிழமை புதையல் தோண்டிய 4 பேரை முல்லைத்தீவு பொலிஸார் கைது செய்துள்ளதுடன் அவர்களிடமிருந்து புதையல் தோண்டும் ஆயுதங்களும், ஜேசிபி இயந்திரமும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு - புதுக் குடியிருப்பு - புதுமாத்தளன் - சாலை கடற்கரை பகுதியில் 4 பேரடங்கிய குழுவினர் புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாக இராணுவத்தினருக்கு கிடைத்த இரகசியத்தகவல் அடிப்படையில் குறிதத் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இவ்வாறு கைதானவர்களை மேலதிக விசாரணைகளின் பின்னர் நேற்று முன்தினம் முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் முற்படுத்திய போது இரண்டு லட்சம் ரூபாய் சரீர பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். (6-299)



கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ஆசிரியர் மாணவர் மன்றம் நடத்திய சர்வதேச ஆசிரியர் தினவிழா கடந்த சனிக்கிழமை காலை கலாசாலையின் ரதிலட்சுமி மண்டபத்தில் இடம் பெற்றது. (படம்: சிவசாந்தன்)

# கைதடி நூலகத்தில் வாசிப்பு மாத போட்டிகள்

(சாவகச்சேரி)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சாவகச்சேரிப் பிரதேச சபையின் கைதடி பொது நூலகத்தினால் அதன் எல்லைக்குட்பட்ட முன்பள்ளி மாணவர்களுக்கான அபிநயத்துடன் கதைகூறல் மற்றும் வர்ணம் தீட்டல் போட்டிகள் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30மணிக்கு வர்ணம் தீட்டல் போட்டியும் நாளை மறுதினம் வியாழக் கிழமை காலை 9 மணிக்கு அபிநயத்துடன் கதை கூறல் போட்டியும் நூலக மண்டபத்தில் இடம் பெறவுள்ளது என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (6-30)

# வேட்புமனுவை தாக்கல் செய்தது ஈழ மக்கள் ஜனநாயக கட்சி



(யாழ்ப்பாணம்)

டக்ளஸ் தேவானந்தா தலைமையில் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்திற்கான வேட்புமனுவை தாக்கல் செய்தது ஈழ மக்கள் ஜனநாயக கட்சி.9 ஆவது பாராளுமன்ற தேர்தலுக்கான வேட்புமனுவை ஈழ மக்கள் ஜன நாயக கட்சி தாக்கல் செய்துள்ளது.

இன்று நண்பகல் 12 மணியளவில் யாழ் மாவட்ட உதவி தேர்தல் அத்தாட்சி அலுவலகத்தில் கட்சியின் செயலாளர் நாயகமும் கட்சியின் யாழ்ப்பாணம் கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தின் முதன்மை வேட்பாளருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் குறித்த வேட்பு மனு தாக்கல் செய்யப்பட்டது.

இதன்போது 2024 ஆம் ஆண்டு நவம்பர் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணம் கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் ஈபிடிபி வேட்பாளர்களின் பெயர் பட்டியல் உள்ளடங்கிய வேட்புமனுவை யாழ்ப்பாணம் கிளிநொச்சி தேர்தல் மாவட்ட அத்தாட்சி அலுவலரிடம் கையளித்தார். (நி-33)

# வேட்பு மனுக்களை கையளித்தது அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்



(கொழும்பு)

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியினர் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத் திற்குரிய வேட்பு மனுக்களை நேற்று கையளித்தனர்.

எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடுவதற்காக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியினர் நேற்று யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் வேட்புமனுத் தாக்கல் செய்தனர்.

வேட்புமனு தாக்கலுக்கு முன்னர் வேட்பாளர்கள் தியாக தீபம் திலீபனின் நினைவுத் தூபியில் அஞ்சலி செலுத்தியிருந்தனர். அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் சைக்கிள் சின்னத்தில் களமிறங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-33)

## கூட்டுறவு தினவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட சிக்கனக் கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சாமாசம் நடத்தும் 102 ஆவது சர்வதேச கூட்டுறவு தினவிழாவும் கௌரவிப்பு நிகழ்வும் நாளை காலை 9.30 மணிக்கு யாழ். வண்ணை ஸ்ரீகாமாட்சி அம்பாள் ஆலய திருமண மண்டபத்தில் கூட்டுறவு சங்கத் தலைவர் திருமதி ச.பரமானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது. (6)

## கருத்தரங்கும் நூல் வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

கல்வி அபிவிருத்திக் குழுமம் நடத்தும் முன்பள்ளித் துறைசார் விழிப்புணர்வுக் கருத்தரங்கும் "21 ஆம் நூற் றாண்டு முன்பள்ளிச் செல்நெறிகள்" நூல் வெளியீடு நிகழ்வும் எதிர் வரும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணி தொடக்கம் மதியம் 12.10 மணிவரை கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நடைபெறவுள்ளது.

கல்வி அபிவிருத்திக் குழுமத் தலைவர் ம.சூரியசேகரம் தலைமையில் இடம் பெறவுள்ள நிகழ்வில் வடமாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன், சிறப்பு விருந்தினராக வடமாகாணக் கல்வி அமைச்சு செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன் மற்றும் கௌரவ விருந்தினராக வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் க.பிரட்லி ஜெனட் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (6)

# நாய்களுக்கான விலங்கு விசர்நோய் தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை எல்லைக்குள் அமைந்துள்ள குருநகர் பொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குபட்ட வளர்ப்பு நாய்களுக்கு இலவசமாக விலங்கு விசர் நோய் தடுப்பூசி (ARV) கீழ்வரும் இடங்களில் வைத்து தடுப்பூசி ஏற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டடுள்ளது.

இச்சந் தர்ப்பத்தை பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசியை பெற்றுக்கொள்ளுமாறு யாழ். மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார். (6)

| திகதி | நேரம் | தடுப்புமருந்து ஏற்றப்படும் நிலையத்தின் பெயர் |
|---|---|---|
| 09.10.2024 | மு.ப 9.00- மு.ப.11.00 | பழைய பூங்கா வீதி |
| | மு.ப 11.00 - பி.ப. 1.00 | புதிய வீடமைப்பு திட்ட வீதி |
| | பி.ப- 2.30- பி.ப.4 .00 | தொடர்மாடி குடியிருப்பு |
| 10.10.2024 | மு.ப.9.00- மு.ப. 11.00 | குருநகர் பொலிஸ் நிலையத்துக்கு அருகில் |
| | மு.ப 11.00 - பி.ப. 1 .00 | பழைய பூங்கா சிறுவர் நீதிமன்றப்பகுதி |
| | பி.ப- 2.30- பி.ப.4 .00 | திருநகர் மாணவர் படிப்பகம் |
| 14.10.2024 | மு.ப.9.00- மு.ப. 11.00 | இராஜசிங்கம் வீதி மாதாசிலையடி பகுதி |
| | மு.ப 11:00 - பி.ப. 1 .00 | சென்பற்றிக்ஸ் வீதி சேமக்காலை அருகில் |
| | பி.ப- 2.30- பி.ப.4 .00 | சென்பற்றிக்ஸ் வீதி கதிற்றல் வீதி சந்தி அருகில் |
| 15.10.2024 | மு.ப.9.00- மு.ப. 11.00 | இராஜேந்திர வீதி |
| | மு.ப 11.00 - பி.ப. 1 .00 | டேவிற் வீதி கடற்கரை வீதி சந்தி அருகில் |
| | பி.ப- 2.30- பி.ப.4 .00 | மவுண்காமல் வீதி பாங்சால் வீதி |
| 16.10.2024 | மு.ப.9.00 - மு.ப. 11.00 | சென்றோக்ஸ் சனசமூக நிலையம் |
| | மு.ப 11.00 - பி.ப. 1 .00 | றெக்கிள மேசன் சனசமூக நிலையம் |
| | பி.ப- 2.30- பி.ப.4 .00 | புதிய கடற்கரை தண்ணீர்தாங்கி சந்தி |
| 17.10.2024 | மு.ப.9.00- மு.ப. 11.00 | தண்ணீர் தாங்கி 4 ஆம் 5 ஆம் குறுக்குத்தெரு |
| | மு.ப 11.00 - பி.ப. 1 .00 | சென் ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை முன்பாக |
| | பி.ப- 2.30- பி.ப.4 .00 | 2ம் குறுக்குத்தெரு குருநகர் |
| 18.10.2024 | மு.ப.9.00- மு.ப. 11.00 | ஜஸ்பிளான்ட் வீதி |
| | மு.ப 11.00 - பி.ப. 1 .00 | குருநகர் சனசமூக நிலையம் முன்பாக |
| | பி.ப- 2.30- பி.ப.4 .00 | கடற்கரை வீதி 1 ஆம் குறுக்குத்தெரு சந்தி |
| 21.10.2024 | மு.ப.9.00- மு.ப. 11.00 | பாங்சால் வீதி 4 ஆம் குறுக்குத்தெரு சந்தி |
| | மு.ப 11.00 - பி.ப. 1 .00 | யாகப்பர் ஆலயத்திற்கு அருகாமை |
| | பி.ப-2.30- பி.ப.4 .00 | புதுமை மாதா ஆலயத்திற்கு அருகாமை |
| 22.10.2024 | மு.ப.9.00- மு.ப. 11.00 | ஓடக்கரை வீதி |
| | மு.ப 11.00 - பி.ப. 12.00 | யூபிலி மகப்பேற்று நிலையம் முன்பாக |
| | பி.ப 12.00 - பி.ப. 1.00 | குருநகர் சின்ன ஆஸ்பத்திரி முன்பாக |
| | பி.ப.2.30 - பி.ப. 4.00 | செபஸ்ரியார் கோவில் அருகாமை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதியோர சிறுவர்கள் இலங்கையில் அதிகரிப்பு

## ஆய்வில் அதிர்ச்சித் தகவல்

**(கொழும்பு)**

**இலங்கையில் அண்மையில் நடத்தப்பட்ட சமூக ஆய்வு அறிக்கைகளின்படி நாடு முழுவதும் 15,000 முதல் 30,000 வீதியோர சிறுவர்கள் இருப்பதாகத் தகவல் வெளியாகியுள்ளது.**

இவர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் தாய் அல்லது தந்தையை இழந்தவர்கள் என்பதும் அவர்களில் கணிசமானோர் பெரியோர் கவனிப்பின்றி தெருக்களில் அலைவதும் தெரியவந்துள்ளது.

யாசகம் எடுப்பது, மது மற்றும் போதைப்பொருள் பாவனை, போக்குவரத்துக்கு பயன்படுத்துதல் போன்ற சூழ்நிலைகளுக்கு அவர்கள் பலியாகி வருவதாக ஆய்வு அறிக்கைகள் தெரிவிக்கின்றன என்று வைத்திய நிபுணர் சமல் சஞ்சீவ குறிப்பிட்டார்.

கொழும்பு உள்ளிட்ட புறநகர்ப் பகுதிகளிலும், மத வழிபாட்டுத் தலங்களைச் சூழவுள்ள இடங்களிலும் இவ்வாறான வீதியோரக் குழந்தைகளைக் காணமுடியும் என வைத்தியர் சுட்டிக்காட்டுகிறார்.


இதுதவிர வறுமை காரணமாகவோ சமூக, பொருளாதார, அரசியல் பிரச்சினைகளால் புறக்கணிக்கப்படும் சமூகப் பிரிவுகள் குறித்தும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும்.

இல்லையென்றால் பல்வேறு சமூக-பொருளாதார பிரச்சினைகளால் சுகாதார சீர்கேடுகள் உருவாகலாம் என தொடர்புடைய ஆய்வு அறிக்கைகளை மேற்கோள் காட்டி அவர் தெரிவித்தார்.

இலங்கையின் தோட்டப் புறங்களிலும், சில மதப் பிரிவுகளிலும் கிராமப்புற மற்றும் அரை நகர்ப்புறங்களிலும், அடுக்குமாடி குடியிருப்புகளிலும் இவ்வாறான புறக்கணிக்கப்பட்ட குழுக்கள் இருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளதால், அவர்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்கான கொள்கைகளை அதிகாரிகள் வகுக்க வேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி)

# அரசாங்கத்தால் வழங்கப்படும் சலுகைகளை துறக்க தயார்

## இராதாகிருஷ்ணன் திட்டவட்டம்



(கொழும்பு)

அரசாங்கத்தால் வழங்கப் படும் சலுகைளைத் துறப்பதற்கு தயார். என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான வீ.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், எமது மக்களுக்கு எதையாவது செய்ய வேண்டும்.

எனவே ஆட்சியமைப்பதற்கு தேசிய மக்கள் சக்தி அழைப்பு விடுத்தால் அது தொடர்பில் தமிழ் முற்போக்கு கூட்டணி பரிசீலிக்கும்.நாம் அழைப்பை ஏற்க விருப்பம் எனக் கூறவில்லை. ஆனால் பரிசீலிக்க முடியும்.


மக்களுக்காக வரப்பிரசாதங்களை துறப்பதற்கு நான் தயார். எனக்கு வாழ்வதற்குரிய வருமான வழி உள்ளது.

எனவே, அரசாங்கத்தால் வழங்கப்படும் சலுகைளைத் துறப்பதற்கு தயார் எனவும் இராதாகிருஷ்ணன் தெரிவித்தார். (நி)

லங்கா மஹால் (PVT) LTD
DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில்
இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை. (394)
இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.
இந்தியா தொடர்புகளுக்கு :
0091956156719
Western Union, MoneyGram, Ria Money Transfer
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு.
077 839 3974

# வடக்கு சுற்றுலாத்துறை அபிவிருத்திக்கு நிதியுதவி

## ஆசிய அபிவிருத்தி வங்கி இணக்கம் தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கையின் சுற்றுலா, வலுசக்தி மற்றும் சிறுதொழிற் துறைகளின் அபிவிருத்திக்கு நிதி உதவி வழங்குவதாக ஆசிய அபிவிருத்தி வங்கி உறுதியளித்துள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி டகபூமி கடோனோவை நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்காக ஆசிய அபிவிருத்தி வங்கியினால் இதுவரையின் முன்னெடுக்கப்பட்டு வரும் அனைத்து ஒப்பந்தங்களும் அவ் வண்ணமே முன்னெடுத்துச் செல்லப்படும்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் வேண்டுகோளுக்கு இணங்க வடக்கில் சுற்றுலாத்துறை அபிவிருத்தியை மேம்படுத்த உதவிகளை வழங்கவும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி டகபூமி கடோனோ இணக்கம் தெரிவித்தார். (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1996- இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>1 இல் சூரி செவ்<br>உயரம் : 5'8"<br>தகைமை/தொழில்: Bsc, Software Engineer(pvt)<br>எதிர்பார்ப்பு: உயர் பதவி<br>தொ.இ:B/14807 | பிறப்பு:1998-இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம<br>கி.பா: 17<br>உயரம் : 5'7"<br>தகைமை/தொழில்: LLB, Lawyer<br>எதிர்பார்ப்பு: உயர்பதவி<br>தொ.இ: G/14822 |
| பிறப்பு:1978 -இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>12இல் செவ்<br>கி.பா: 10 1/2<br>உயரம் :5'4"<br>தகைமை/தொழில்: IT, IT Deparment<br>எதிர்பார்ப்பு: பிள்ளைகளற்ற விவாகரத்தானவர்<br>தொ.இ:B/14808 | பிறப்பு-1996-இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: MBBS<br>எதிர்பார்ப்பு: உயர்பதவி<br>தொ.இ: G/14824 |
| பிறப்பு:1995-RC<br>நட்சத்திரம்: ரோகினி<br>உயரம் :5'11"<br>தகைமை/தொழில்: Software Engineer<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ:B/14809 | பிறப்பு-1996-இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>11 இல் சூரி செவ்<br>கி.பா: 13/4<br>உயரம் :5'6"<br>தகைமை/தொழில்: HND, Office Staff(pvt)<br>எதிர்பார்ப்பு: உயர் பதவி<br>தொ.இ: G/14825 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## இந்திய விமான சாகச நிகழ்வு

### ஐவர் உயிரிழப்பு
### 200 இற்கு மேற்பட்டோர் வைத்தியசாலையில்



(டில்லி)
சென்னையில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்திய விமானப்படையின் விமான கண்காட்சியின் போது 5 பார்வையாளர்கள் இறந்ததுடன் 200 இற்கும் மேற்பட்டோர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

இந்தச் சம்பவத்தை அடுத்து தமிழக அரசு எதிர்க்கட்சிகளின் கடுமையான கண்டனத்திற்கு உள்ளாகியுள்ளது.

இந்திய விமானப் படையின் 92 ஆவது ஆண்டு விழாவைக் கொண்டாடும் வகையில் மெரினா கடற்கரையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் இலட்சக்கணக்கான மக்கள் நெரிசல், அடிப்படை வசதிகள் மற்றும் கடுமையான வெப்பத்தில் போராடியமையினால் இந்த நிலை ஏற்பட்டிருந்தது.

இந்த நிகழ்வினை காண்பதற்கு சுமார் 16 இலட்சம் பேர் வருகை தந்திருந்தாகவும் கூறப்படுகிறது.

இந்தச் சம்பவம் தற்சமயம் முதல்வர் ஸ்டாலின் தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழக அரசின் மீது கடுமையான கண்டனத்தை ஏற்படுத்தியுள்ளது. (நி)

## மருத்துவத்திற்கான நோபல் பரிசு; இருவரின் பெயர்கள் அறிவிப்பு

(ஸ்டார்ஹோம்)
2024 ஆம் ஆண்டின் மருத்துவத்துக்கான நோபல் பரிசு இருவருக்கு பகிர்ந்தளிப்பதாக நேற்று திங்கட்கிழமை அறிவிக்கப்பட்டுள்ளது.

இயற்பியல், வேதியியல், மருத்துவம், இலக்கியம், பொருளாதாரம் ஆகிய துறைகளில் முக்கிய பங்களிப்பை ஆற்றியவர்களுக்கும் அமைதிக்காக பாடுபட்டவர்களுக்கும் ஆண்டுதோறும் நோபல் பரிசு வழங்கப்பட்டு வருகிறது. தங்கப் பதக்கம், சான்றிதழ் 10 லட்சம் டொலர் ஆகியவை பரிசாக வழங்கப்படுகின்றன.

நிகழாண்டில் மருத்துவத்துக்கான நோபல் பரிசு குறித்த அறிவிப்பை நோபல் அமைப்பு நேற்று வெளியிட்டுள்ளது.

அதன்படி மைக்ரோ ஆன்என்ஏ வை கண்டுபிடித்ததற்காக அமெரிக்காவின் விக்டர் அம்பரோஸ் மற்றும் கேரி ருவ்கின் ஆகியோருக்கு நோபல் பரிசு வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 1901 ஆம் ஆண்டிலிருந்து வழங்கப்பட்டு வரும் நோபல் பரிசை நிறுவியவர் சுவீடனைச் சேர்ந்த ஆல்பிரட் நோபல். வேதியியல், பொறியியலில் நிபுணரான இவர் டைனமைட் வெடிபொருளைக் கண்டுபிடித்தார்.

தனது கண்டுபிடிப்பின் மூலம் பெரும் செல்வந்தரான இவர் அறிவியல் கண்டுபிடிப்புகளை கௌரவிக்கும் வகையில் நோபல் பரிசை நிறுவினார். அவரது நினைவு தினமான டிசம்பர் 10 ஆம் திகதி பரிசு வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

## கலிபோர்னியா ஏரியில் 'வெள்ளைத் தங்கம்' கண்டுபிடிப்பு



(வோஷிங்டன்)
தெற்கு கலிபோர்னியாவில் உள்ள ஒரு பெரிய ஏரியின் அடிப்பகுதியில் 540 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான லித்தியத்தின் மிகப்பெரிய இருப்பு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த உலோகம் பெரும்பாலும் "வெள்ளைத் தங்கம்" என்று அழைக்கப்படுகிறது.

அமெரிக்க மாநிலத்தின் மிகப்பெரிய ஏரியான சால்டன் கடல், அந்நாட்டு எரிசக்தி துறையின் நிதியுதவியின் ஒரு பகுதியாக விஞ்ஞானிகளால் ஆய்வு செய்யப்பட்டது. வெள்ளை மணல் போன்ற தோற்றத்தால் காணப்படும் லித்தியம் ஏரியின் அடிப்பகுதியில் எவ்வளவு உள்ளது என்பதைக் கண்டறிவதே இந்த ஆய்வின் நோக்கமாகும்.

இதன்போது, ஆச்சரியப்படும் விதமாக ஏரியில் 18 மில்லியன் தொன் லித்தியம் இருப்பதை விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

அகழ்வுப் பணி மூலமாக இவை பிரித்தெடுக்கப்பட்டால் அதன் மூலமாக 382 மில்லியன் மின்சார வாகனங்களுக்கு மின்கலங்களை உருவாக்க முடியும்.

இதனால் மின்சார வாகனங்களுக்கான மின்கலங்களை உருவாக்கும் நாடுகளில் அமெரிக்கா முன்னணியாக மாறும். (நி)

## பள்ளி மற்றும் மசூதி மீது இஸ்ரேல் குண்டு மழை

### 26 பேர் பலி 93 பேர் படுகாயம்



(ஜெருசலேம்)
சர்வதேச நாடுகளின் அழுத்தத்தையும் மீறி பாலஸ்தீனம் லெபனான் மீது இஸ்ரேல் சரமாரியாகத் தாக்குதல் நடத்தி வருகிறது. பாலஸ்தீனத்தில் இதுவரை இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் 41 ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர்.

இதில் பெரும்பாலானோர் பெண்களும் குழந்தைகளுமே ஆவர்.

இந்நிலையில் தற்போது லெபனான் மீது குறிவைத்து இஸ்ரேல் தாக்கி வந்தாலும், காசா மீதான தாக்குதலையும் தீவிரப்படுத்தி உள்ளது.

மத்திய காசாவின் டெய்ர் அல்-பலாஹ் நகரில் அல்-பலாஹ் நகரில் அல்-அக்ஸா தியாகிகள் மருத்துவமனைக்கு அருகே இடம் பெயர்ந்த மக்கள் தஞ்சமடைந்திருந்த மசூதி மற்றும் பள்ளியை குறிவைத்து நேற்று அதிகாலை இஸ்ரேல் குண்டுகளை வீசியது.


இந்தத் தாக்குதலில் 26 பேர் கொல்லப்பட்ட நிலையில் 93 பேர் படுகாயமடைந்துள்ளனர். இதற்கிடையே வடக்கு காசாவில் தாக்குதலை தீவிரப்படுத்தப்பட்டுள்ள இஸ்ரேல் அங்குள்ள மக்களை வெளியேறும் படி எச்சரிக்கை விடுத்துள்ளது. (நி)

## பலமு...
## லெபனா...
## இஸ்...



இஸ்ரேல் ஹமாஸ் போரின் முதலாம் ஆண்டு நிறைவை முன் ...

## மீண்டும் இந்தியாவுட...
## மாலைதீவு ஜனா...



(மாலே)
மாலைதீவு ஜனாதிபதி மொஹமட் முய்சு நான்கு நாட்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இந்தியாவை வந்தடைந்தார்.

இதன்போது இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கரை சந்தித்த முய்சு இருதரப்பு உறவுகளை மேம்படுத்த விரும்புவதாக தெரிவித்தார்.

அத்துடன் இந்தியாவுடனான உறவு மாலைதீவுக்கு முதன்மையானது என்றும் இந்தியாவின் பாதுகாப்புக்கு எதிரான எந்த ஒரு செயலையும் மாலைதீவு அனுமதிக்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முனைகளில் தாக்குதல்!

## னான் மக்களை வெளியேறுமாறு

## ரேல் உத்தரவு பிறப்பிப்பு



(ஜெருசலேம்)

**இஸ்ரேல் 7 முனைகளில் போரை நடத்தி வருவதாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு பெருமையுடன் குறிப்பிட்டுள்ளார்.**

னிட்டு பெஞ்சமின் நெதன்யாகு வெளியிட்டுள்ள காணொளியிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.


இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், "ஹமாஸ், ஈரான், ஹிஸ்புல்லா, மேற்குக் கரை பயங்கரவாதிகள் மற்றும் ஈராக்-சிரியா ஷியா போராளிகளின் தாக்குதல்களில் இருந்து எங்கள் நாட்டை நாங்கள் பாதுகாத்து வருகிறோம்.

இஸ்ரேலின் தற்காப்பு உரிமையை மீண்டும் வலியுறுத்திய நெதன்யாகு ஈரானின் பாலிஸ்டிக் ஏவுகணை தாக்குதலுக்கு நிச்சயமாக பழிவாங்குவேன். எனத் தெரிவித்தார்.

இதேவேளை, இஸ்ரேல் போர் ஆரம்பித்து இன்றுடன் ஒருவருடம் நிறைவு பெற்றுள்ளது. இதனால் மத்திய கிழக்கு பகுதிகளில் போர்ப்பதற்றம் உருவாகியுள்ளது.

மேலும் லெபனான் தலைநகர் மீது கடுமையான தாக்குதலை நடத்தி வரும் இஸ்ரேல் பொதுமக்களை மொத்தமாக வெளியேற உத்தரவிட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## வுடன் கைகோர்க்கும் னாதிபதி முய்சு



காது என்றும் உறுதியளித்துள்ளார்.

அதற்கு வரவேற்பு தெரிவித்த ஜெய்சங்கர் பிரதமர் மோடியுடன் இடம்பெறவுள்ள உள்ள பேச்சுவார்த்தை இருதரப்பினர் உறவையும் வலுப்படுத்தும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

இதேவேளை நடைபெறவுள்ள இந்தியப் பிரதமர் மோடியுடனான சந்திப்பின் போது பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள மாலைதீவின் கடன் சுமையைக் குறைக்கும் விதமாகப் பிரதமர் மோடியிடம் நிதியுதவி கோரவுள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது. (நி)

## தகர்க்கப்பட்ட ஹிஸ்புல்லாவின் சுரங்கப்பாதை

(பெய்ரூட்)


இஸ்ரேல் இராணுவம் லெபனான் மீது தொடர் தாக்குதல் நடத்தி வரும் நிலையில் ஹிஸ்புல்லாவின் இரகசிய சுரங்கத்தை அழித்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

நேற்று முன்தினம் நள்ளிரவில் இஸ்ரேல் இராணுவம் லெபனானின் திரிபோலி பகுதியில் வான்வழி தாக்குதலை நடத்தியது. அதில் 250 மீற்றர் நீளமுள்ள ஹிஸ்புல்லாவின் இரகசிய சுரங்கப்பாதை தகர்க்கப்பட்டதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது. இந்த தாக்குதலில் ஹமாஸ் அமைப்பின் முக்கிய உறுப்பினரான அலா நயீப் அலி என்ற நபர் கொல்லப்பட்டுள்ளார்.

இவர் லெபனானில் ஹிஸ்புல்லா உதவியுடன் ஹமாஸ் அமைப்புக்கு ஆள் சேர்க்கும் பணியில் ஈடுபட்டு வந்ததுடன் இஸ்ரேல் மீதான தாக்குதல்களை திட்டமிட்டு வந்ததாகவும் கூறப்படுகிறது.

இந்தச் சுரங்கத்திற்குள் சமையலறை ஒன்றும், வசிக்கும் இடம், போருக்கு பயன்படுத்தும் பைகள், குளிர்சாதன பெட்டி ஒன்று மற்றும் பிற பொருட்கள் வைக்கப்பட்டு இருந்தன.

ஹிஸ்புல்லாவின் ரத்வான் படைகள் இஸ்ரேலுக்குள் படையெடுக்க பயன்படுத்துவதற்காக இந்த சுரங்கம் வடிவமைக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)



## பாகிஸ்தானில் குண்டு வெடிப்பு இருவர் பலி, 10 பேர் காயம்



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் கராச்சியில் உள்ள ஜின்னா சர்வதேச விமான நிலையம் அருகே இடம்பெற்ற வெடிவிபத்தில் சீன பிரஜைகள் இருவர் உயிரிழந்துள்ளதுடன் குறைந்தது 10 பேர் காயமடைந்துள்ளனர்.

இதனால் பல வாகனங்களும் தீக்கிரையாகியுள்ளன.

பாகிஸ்தானில் உள்ள சீனத் தூதரகம், இதுவொரு பயங்கரவாதத் தாக்குதல் என்று விவரித்துள்ளது.

பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில் மின் திட்டத்தில் பணிபுரியும் சீன பொறியாளர்களின் தொடரணியை குறிவைத்து இந்த தாக்குதல் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்டுள்ளதாகத் தூதரகம் தெரிவித்தது.

இத் தாக்குதலுக்கு பிரிவினைவாத பலுசிஸ்தான் விடுதலை இராணுவம் பொறுப்பேற்றுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாமரை கோபுரத்திலிருந்து வீழ்ந்து மாணவி உயிரிழப்பு


(கொழும்பு)

கொழும்பு தாமரை கோபுரத்தின் கண்காணிப்பு தளத்தில் இருந்து பாடசாலை மாணவி ஒருவர் தவறி விழுந்து உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

அவர் தவறி வீழ்ந்தமைக்கான சூழ்நிலைகளைத் தீர்மானிக்க விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (6)

# 200 மில்.டொலர்களை வழங்கும் உலக வங்கி



(கொழும்பு)

இலங்கையின் பொருளாதார முன்னேற்றம் மற்றும் பொருளாதார மறுசீரமைப்பு வேலைத்திட்டங்களுக்கும் ஒத்துழைக்கும் வகையில் உலக வங்கி குழுமத்தின் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தினால் மேலும் 200 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதற்கு அமைவான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் நிகழ்வு நேற்று பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றதோடு, இந்த ஒப்பந்தத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் முன்னிலையில் இலங்கை அரசாங்கத்தின் நிதி அமைச்சர் கே. எம். மஹிந்த சிறிவர்தன மற்றும் உலக வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் டேவிட் சிஸ்லேன் ஆகியோர் கையொப்பமிட்டனர். (நி)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 140 | 130 | 160 | 130-170 | 150 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 180 | 165 | 200 |
| பச்சைமிளகாய் | 240 | 200 | 200 | 200-250 | 300 |
| தக்காளி | 300 | 250 | 400 | 200 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 240 | 200 | 150-180 | 200 |
| கோவா | 200 | 300 | 200 | 270 | 250 |
| கரட் | 180 | 200 | 250 | 230 | 250 |
| பூசணி | 80 | 60 | 80 | 50 | 100 |
| புடோல் | 60 | 130 | 100 | 150 | 200 |
| வாழைக்காய் | 180 | 160 | 200 | 120-150 | 250 |
| சின்ன வெங்காயம் | 350 | 350 | 300 | 150-350 | 400 |
| பெரிய வெங்காயம் | 280 | 200 | 250 | 280 | 300 |
| பாகற்காய் | 550 | 450 | 450 | 400-500 | 400 |
| வெண்டக்காய் | 160 | 150 | 100 | 150 | 200 |
| கருணைக் கிழங்கு | 140 | 160 | 200 | 150 | 240 |
| பயற்றங்காய் | 300 | 300 | 300 | 300-400 | 400 |
| லீக்ஸ் | 260 | 300 | 300 | 260 | 400 |
| பீற்றூட் | 100 | 150 | 200 | 150 | 200 |
| கறிமிளகாய் | 400 | 450 | 450 | 400 | 600 |
| முருங்கைக்காய் | 600 | 400 | 300 | 200-300 | 400 |
| போஞ்சி | 350 | 500 | 450 | 300 | 600 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | 180 | -- | 120 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 150 | 80 | 120 |
| தேசிக்காய் | 400 | 350 | 450 | 300-400 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 140 | 130 | 80-140 | 100-150 |
| இராசவள்ளி | -- | 900 | 1500 | 600 | 1200 |
| வெங்காயப்பூ | 350 | 450 | 450 | -- | 400 |
| முள்ளங்கி | 100 | 120 | 120 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 60 | 120 | 80 | 100 |
| வல்லாரை | 60 | 30 | 80 | 100 | 100 |
| ஈரப்பலா | 100 | -- | 100 | -- | 160 |

# இன்று ஒரு தகவல் 235



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

## காந்தசக்தி சிகிச்சை

எகிப்து நாட்டு அழகி கிளியோபெட்ரா! அவர் ஒரு காந்தக் கம்பியை எடுத்து தன்னுடைய தலையிலே கட்டிக்கொள்வது வழக்கமாம். எதற்கு? அப்படிக் கட்டிக்கொண்டால் அது அவர் அழகை பாதுகாக்கும் என்று நம்பினாராம்.

அதற்காக இப்போது உள்ளவர்கள் யாரும் அப்படி செய்ய வேண்டாம்! கம்பியை எடுத்து தலையிலே சுத்திக் கொண்டு தெருவிலே நடந்தீர்கள் என்றால் பார்க்கிறவர்கள் என்ன நினைப்பார்கள்? சந்தேகப்படுவார்கள்?

இப்போது நான் சொல்ல வந்தது என்ன என்றால் உடல்நலத்தை பாதுகாப்பதற்கு காந்த சக்தியை உபயோகப்படுத்தும் முறை பல காலமாகவே இருந்துகொண்டு வருகிறது. இப்பவும் கூட இடுப்பிலே, கையிலே,மணிக்கட்டிலே கம்பியைக் கட்டிக்கொள்கின்றவர்கள் இருக்கிறார்கள். அதனாலே ரத்த அழுத்தம் குறையும் என்று கூட சொல்லுகின்றார்கள்.

ரஷ்யாவிலேயும் ஜப்பான் நாட்டிலேயும் பலகாலமாக காந்தசக்தி கொண்ட கழுத்துச் சங்கிலி, இடைவார் பட்டை, நாற்காலி இவை எல்லாம் உபயோகப்படுத்தி ஆஸ்துமா,ரத்த அழுத்தம், மூட்டு அழற்சி, முடக்கு வாதம், சிறுநீர்க்கல், இவற்றுக் கெல்லாம் சிகிச்சை கொடுக்கிறார்களாம். காந்த சக்தி கொண்ட தண்ணீரை உயயோகப்படுத்தி சில நோய்களை தீர்த்து வைக்கிறார்களாம். விஞ்ஞானபூர்வமாக பார்க்கும்போது நமது உடம்பிலே இருக்கின்ற ஒவ்வொரு செல்லும் ஒரு மின்அலகு. அதற்கென்று ஒரு காந்தத் தளம் ஒவ்வொரு உறுப்பைச் சுற்றியும் இருக்கிறது. இதிலே இருந்து நேர்மறை, எதிர்மறை பண்புகள் வெளிப்படுகிறது.

அதாவது நேர் அயன்கள், எதிர் மின் அயன்கள் இந்த இரண்டும் வெளிப்படுகின்ற அளவு, சமநிலை, தரம் என்பவற்றைப் பொறுத்து உடம்பு நன்றாக இருக்கும். அல்லது நோய் உண்டாகும். இரத்தத்திலே இரும்புச்சத்து இருக்கிறது.

அதில் காந்தத் தளம் செயற்படும்போது இரத்த ஓட்டத்திற்கு ஒரு ஊக்கம் கிடைக்கிறது. வளர்ச்சி மாற்றத்தை ஊக்கப்படுத்துகிறது.

பல திசுக்கள் வழியாக மின் ஓட்டம் போகும் போது கொலஸ்ரோல், கல்சியம், யூரியா, சிறுநீரக்கக்கல் இவற்றை சிறு நீர் மூலமாக வெளியேற்றி விடுகிறது. இப்படித்தான் காந்த சக்தி சிகிச்சை முறை பற்றி அது சம்பந்தமான வைத்தியர்கள் விளக்கம் கொடுக்கிறார்கள். காந்த சிகிச்சையை 3 வகையாக பிரிக்கிறார்கள்.

ஒன்று தலை சிகிச்சை, இரண்டாவது பொது சிகிச்சை, மூன்றாவது காந்த சக்தி கொண்ட தண்ணீர் மூலமாக கொடுக்கும் சிகிச்சை. மின்னோட்டத்தையும் காந்த சக்தியையும் ஒன்றாகச் சேர்த்து மின்காந்த சிகிச்சை முறை என்ற ஒன்றை சோவியத் நாட்டிலே கண்டுபிடித்து இருக்கிறார்கள். லேசர் சிகிச்சையாலும் அறுவை சிகிச்சையாலும் குணமடையாத இரப்பை புண்ணை இந்த மின் காந்த அலைகள் மூலமாக தீர்த்து வைக்கிறார்களாம். மின் சக்தி சிகிச்சை என்பது ஏற்கனவே இருந்து கொண்டு இருக்கிறது.

1987 இல் ஜெனியா அயர்டன் என்கின்ற ஒரு 15 வயது பெண். 100 மீற்றர், 200 மீற்றர் ஓட்டப்பந்தயத்தை கற்றுக் கொண்டு உலக சாதனை படைத்தார். கொஞ்ச நாளில் அந்த பெண்ணிற்கு இடது காலில் ஏதோ ஒரு வலி ஏற்பட்டது. அதனால் அதற்கு பிறகு சில போட்டிகளில் கலந்து கொள்ளமுடியாமல் போய்விட்டது.

அதை சரிப்படுத்த பல சிகிச்சைகள் எல்லாம் செய்து பார்த்தார்கள். சரியாகவில்லை. கடைசியில் MET மூலமாக குணப்படுத்தினார்களாம். நுண்மின் சிகிச்சை, தலை வலி, இடுப்பு வலி ,கால் சுளுக்கு, முதுகுவலி, கழுத்து வலி இவற்றிற்கெல்லாம் இந்த சிகிச்சை உடனடியாக பலன் கொடுப்பதாக அமெரிக்க பாஸ்டர் பல்கலைக்கழக மருத்துவத்துறை அறிக்கை சொல்கிறது.

இந்த மின் சிகிச்சையும் காந்த சிகிச்சையும் சேர்ந்தது தான் மின் காந்த சிகிச்சை முறை. வருகின்ற காலத்திலே இதைப் போல் மருந்து இல்லாத வைத்திய முறைகள் மிகவும் பிரபலமாகும் போல் இருக்கிறது.

அப்படி என்றால் அது நல்லது தான். ஏன் என்றால் மருந்துடன் விலையும் அதிகமாக இருக்கிறது. அத்துடன் பக்க விளைவும் அதிகமாக இருக்கிறது. ஒரு நோய்க்கு கொடுக்கின்ற மருந்து அதை தீர்த்து விட்டு அதற்கு பதிலாக இன்னொரு நோயை உண்டாக்கி விட்டு போய்விடுகிறது.

மனிதனைச் சுற்றி மட்டுமல்ல செடி,கொடி ,புழு ,பூச்சி விலங்குகள் இவை எல்லாவற்றையும் சுற்றிக் கொண்டு ஒரு போர்வை போல் மின் காந்த சக்தி இருக்கிறது என்று விஞ்ஞானிகள் கண்டுபிடித்து இருக்கிறார்கள். ஒரு காந்தத்திற்கு இரண்டு துருவும் இருக்கிறது. ஒன்று வடக்கு இன்னொன்று தெற்கு .

இப்பொழுது உதாரணத்திற்கு உடம்பிலே ஒரு பகுதியும் தாங்கமுடியாத வலி உண்டாகிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். வலி உள்ள இடத்தில் தென் துருவத்தையும் வடதுருவத்தையும் பாதிக்கப்பட்ட பகுதிக்கு எதிர்ப்பக்கத்தில் வைத்தால் நல்ல பலன் கிடைக்கும். எமது வீட்டிலும் காந்தசிகிச்சை முறை நல்ல பலன் கொடுக்கிறது சார் என்றார் எம்மைச் சேர்ந்த ஒருவர்.

எப்படி என்று கேட்டேன் பொதுவாக உலகத்திலே கணவன், மனைவி இரண்டு பேரும் எதிர் எதிர் துருவமாக இருக்கிறார்கள் என்று கூறுவது உண்டு. ஆனால் நாங்கள் அப்படி இல்லை சார். உங்கள் வீட்டில் இரண்டு பேரும் ஒரே துருவமாக இருக்கிறோம் அதனாலே எங்களுக்குள் சண்டையே வருவது இல்லை என்றார் மிகவும் பெருமையாக. எப்படி அது என்று ஆச்சரியமாக கேட்டேன்.

அதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை சேர். காந்தத்திலே ஒரே துருவம் கவர்வது இல்லை. அதனாலே உங்கள் வீட்டில் ஒரு துருவம் சண்டைக்காக நெருங்கி வந்தால் இன்னொன்றும் அதே துருவமாக இருப்பதனால் உடனே விலகி தூரத்திற்கு ஓடிப்போய்விடும் என்று அவர் விளக்கம் கொடுத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளப்பற்றாக்குறை; கற்றல் நடவடிக்கை பாதிப்பு



(கண்டாவளை)

வவுனியா வடக்கு மாறா இலுப்பை தமிழ் வித்தியால யத்தில் பௌதிக வளப் பற்றாக் குறை காரணமாக மாண வர்களின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் பாதிக்கப்படு வதாக பெற்றோர்கள் கவலை தெரி வித்துள்ளனர்.

வவுனியா மாவட்டத்தின் மிகவும் பின்தங்கிய பிரதேச மாக காணப்படுகின்ற மாறா யிலுப்பை பகுதியில் அமைந் துள்ள மாறாயிலுப்பை தமிழ் வித்தியாலயத்தில் 70 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.

குறித்த பாடசாலையில் போதிய வகுப்பறை வசதிகள் இன்மையால் மாணவர்களின் சில கற்றல் செயற்பாடுகள் மரங் களின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இதனை விட குறித்த பாட சாலை விளையாட்டு முற்றம் காட்டு யானைகளால் சேதமாக் கப்பட்டுள்ளது. எனவே குறித்த பாடசாலை மாணவர்களின் எதிர்கால நலன் கருதி வகுப் பறை வசதிகள் மற்றும் ஏனைய.தேவைகளை உரிய தரப்புக்கள் நடவடிக்கை எடுக் குமாறு பெற்றோர்கள் கோரி க்கை விடுத்துள்ளனர். (6-316)

# தமிழ் மக்களுக்கான தீர்வினை ஜே.வி.பி பெற்றுத் தருமா?

## நம்பிக்கையில்லை என்கிறார் செல்வம்



(மன்னார்)

ஜே.வி.பி தமிழ் மக்களின் இனப்பிரச்சினையை தீர்க் கின்ற, அல்லது தீர்த்து விடும் என்கிற நம்பிக்கை எனக் கில்லை.அவர்கள் தற்போது தேர்தல் ஆசனங்களை கூடு தலாக கைப்பற்ற வேண்டும் என்று சில நடவடிக்கைகளை எடுக்கின்றனர் என ரெலோ தலைவரும்,வன்னி மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித் துள்ளார்.

மன்னாரில் நேற்று திங் கட்கிழமை மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்,

தமிழ்த் தேசிய கட்டமைப்பு சார்பாக சங்குச் சின்னத்தில் நாங்கள் போட்டியிடுகின் றோம். வடக்கு- கிழக்கில் உள்ள அனைத்து மாவட்டங் களிலும், வேட்பாளர்களை நாங்கள் தெரிவு செய்துள் ளோம்.

அம்பாறை மற்றும் திரு கோணமலை பிரதேசங்களில் தமிழரசுக் கட்சியுடன் இணை ந்து போட்டியிடுவதற்கான ஒப்பு தலை வழங்கி உள்ளோம்.

தென்பகுதி மக்கள் அங் குள்ள அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்க ளின் ஊழலுக்கு எதிராக ஜே.வி.பி கட்சிக்கு வாக்களித் துள்ளனர். அந்த அலை தற் போது எங்களிடம் பரவி யுள்ளது.

ஜே.வி.பி உடன் இணை ந்து போட்டியிடுவதில் எமது இளைஞர்கள் ஆர்வத்துடன் இருக்கின்றனர்.

அந்த வகையில் எமது இனப் பிரச்சினையாக இருக்க லாம், எமது நிலங்கள் அப கரிக்கப்படுகின்ற விடயங்களாக இருக்கலாம், கடந்த காலங் களில் அனுபவித்த துப்பாக்கிச் சத்தங்கள் இல்லாத எமது தேசத்தை அனுபவிக்கின்ற நிலைப்பாடுகளை இந்த ஜே.வி.பி அரசாங்கம் நிறுத் துமா? என்கிற கேள்வி இருக் கிறது என அவர் மேலும் தெரிவித்தார். (நி-285)

# அழிவடையும் தென்னைகள் பாதுகாக்க நடவடிக்கை எடுங்கள்



(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள கண்டாவளை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட தரு மபுரம் பகுதியில் கடந்த பத்து வருடங்களாக பயன் தந்து வந்த தென்னை மரங்கள் தற் பொழுது ஏற்பட்டுள்ள கடும் வறட்சி காரணமாக முற்று முழு தாக அழிவடைந்து வருவதாக வும் அதனால் தமது வாழ் வாதாரம் பாதிக்கப்பட்டுள் ளதாகவும் தென்னைப் பயிர்ச் செய்கையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

தற்பொழுது தேங்காய் ஒன்றின் விலை 100-140 ரூபாய் வரை விற்பனை செய் யப்படுவதாகவும் தமது அன் றாட தேவையைப் பூர்த்தி செய்ய முடியாத நிலை ஏற்பட் டுள்ளதாகவும் அவர்கள் கவலை வெளியிட்டுள்ள னர்.


தென்னைப் பயிர்ச் செய் கையினைப் பாதுகாப்பு சம்பந் தப்பட்ட அதிகாரிகள் முன் வர வேண்டும் என பாதிக்கப்பட்ட தென்னைச் செய் கையாளர்கள் தெரிவித்துள்ளனர். (நி-316)

# சிறுத்தைகள் நடமாட்டத்தால் கால்நடை வளர்ப்பாளர்கள் பாதிப்பு

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத் தின் மாங்குளம் அம்பகா மம் கருப்பட்டமுறிப்பு ஆகிய பகுதிகளில் சிறுத்தைபுலி களின் நடமாட்டத்தால் கால் நடை வளர்ப்பாளர்கள் பெரும் அழிவுகளை சந்திப் பதாக தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத் தின் மாங்குளம் கருப்பட்ட முறிப்பு மேழிவனம் மற் றும் ஒட்டுசுட்டான் ஆகிய கிராமங்களில் வாழும் மக் களில் கூடுதலானோர் கால் நடை வளர்ப்பை வாழ் வாதாரமாகக் கொண்டுள் ளனர்



இந்நிலை யில் குறித்த பிர தேசங்க ளில் சிறு த்தை புலிக ளின் நடமாட் டம் அதிக அளவில் காணப்படுகின்றது.

சிறுத்தைபுலிகளால் ஆடுகள் மற்றும் மாடுகள் வேட்டையாடப்படப்படுவ தால் தங்களுடைய வாழ் வாதாரத் தொழில பாதிக்கப்ப டுவதாக கால்நடை வளர்ப் பாளர்கள் கவலை தெரி வித்துள்ளனர். (6-315)

# வன்னி.மாவட்டத்தில் ஈ.பி.டி.பி வேட்பு மனுத் தாக்கல்

(குருமன்காடு)

வன்னி மாவட்டத்தில் பாராளுமன்ற தேர்த லுக்கான வேட்புமனுவினை ஈழமக்கள் ஜனநாயக கட்சி நேற்று பிற்பகல் தாக்கல் செய்தது.

வவுனியா மாவட்ட செய லகத்தில் அமைந்துள்ள தேர்தல் காரியாலத்தில் மாலை வேட்புமனுவினை தாக்கல் செய்தது.

இதன்போது முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கு.திலீபன், மற்றும் ஏனைய வேட்பாளர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

எதிர்வரும் நவம்பர் மாதம் இடம்பெறவுள்ள பாராளுமன்ற தேர்தலில் வன்னித் தேர்தல் மாவட் டத்தில் போட்டியிடுவதற் கான வேட்பாளர் பட்டியலை ஈழ மக்கள் ஜனநாயக கட்சி நேற்று முன்தினம் இறுதி செய்திருந்தமை குறிப்பிடத் தக்கது. (6-250)





யா/ நடேஸ்வரா கனிஷ்ட வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் (ஐரோப்பா) அனுசரணையில் சங்கரப்பிள்ளை நினைவு தின பரிசளிப்பு விழா கடந்த சனிக்கிழமை பாடசாலை மண்டபத்தில் வித்தியாலய அதிபர் திருமதி.வ.சுதர்சன் தலைமையில் இடம்பெற்றது.

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கமானது மாணவர்களி டையே வீட்டுத் தோட்ட செய் கையை ஊக்குவிக்கும் நோக் கில் நடத்தப்படும் மாணாக்க உழவர் வீட்டுத் தோட்டப் போட் டிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப் போட்டியில் ஏற்கனவே வீட்டுத் தோட்டச் செய்கையில் ஈடுபட்டவர்களும், புதிதாக ஈடுபட விரும்புபவர்களும் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் விண் ணப்பிக்க முடியும். விண்ணப்பப் படிவங்களையும், விதைப் பொதி களையும் இல 191, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் என்ற முகவரி யில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்தில் பெற் றுக் கொள்ளலாம். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 600





அப்படி நேரும் விபத்து உனக்கு நேராமலிருக்க வேண்டுமே என்றுதான் நான் கவலைப்படுகிறேன். குழந்தாய்! என் ஏக புதல்வன் உயிரோடிருக்க வேண்டும் என்று நான் ஆசைப்படுவது தவறா? அது உனக்கு நான் இழைக்கும் துரோகமா?"

இவ்வார்த்தைகளினால் மதுராந்தகனுடைய ஆத்திரம் சிறிது தணிந்தது. அவன் உள்ளம் கனிவடைந்தது.

"அன்னையே! மன்னியுங்கள்! தங்களுடைய கவலை இதுதான் என்று முன்னமே சொல்லியிருக்கலாமே? ஒரு நொடியில் தங்கள் கவலையைத் தீர்த்திருப்பேனே! நான் அப்படியொன்றும் துணைவர்கள் இல்லாத அநாதையல்ல. சோழ சாம்ராஜ்யத்தில் மிகச் செல்வாக்கு வாய்ந்த சிற்றரசர்களும், பெருந்தரத்து அதிகாரிகளும் என் பக்கம் இருக்கிறார்கள். பழுவேட்டரையர்கள் என் கட்சியில் இருக்கிறார்கள். கடம்பூர்ச் சம்புவரையர் என் பக்கம் இருக்கிறார். தங்கள் சகோதரரும் என் மாமனுமான மழவரையரும் என் கட்சியில் இருக்கிறார். மற்றும் நீல தங்கரையாரும், இரட்டைக் குடை இராஜாளியாரும், குன்றத்தூர்ப் பெருங்கிழாரும் பூரண பலத்துடன் என்னை ஆதரிக்கிறார்கள். என்னை ஆதரித்து நிற்பதாகச் சத்தியம் செய்து கொடுத்திருக்கிறார்கள்."

"மகனே! இவர்கள் செய்து கொடுக்கும் சத்தியத்தில் எனக்கு நம்பிக்கையில்லை. சுந்தர சோழச் சக்கரவர்த்திக்கும், அவருடைய சந்ததிகளுக்கும் உண்மையுடன் நடப்பதாக இவர்கள் ஒரு காலத்தில் சத்தியம் செய்து கொடுத்தார்கள்.

அவர்கள் உனக்கு உண்மையாக நடப்பார்கள் என்றே வைத்துக்கொள்ளலாம். இவர்களிடம் உள்ள சைன்யம் வெகு சொற்பம் என்பது உனக்குத் தெரியாதா? வடக்கேயுள்ள சைன்யம் ஆதித்த கரிகாலனுடைய தலைமையில் இருக்கிறது. தென்திசைச் சேனையோ கொடும்பாளூர் வேளாரின் தலைமையில் இருக்கிறது."

"தாயே! என் கட்சியை ஆதரிக்கும் சிற்றரசர்கள் எந்த நேரத்திலும் தலைக்குப் பதினாயிரம் வீரர்களைச் சேர்த்துக் கொண்டு வரக்கூடியவர்கள்."

"சைன்யம் ஒரு பக்கம் இருக்கட்டும். மக்களைப் பற்றி என்ன? சோழநாட்டு மக்கள் சுந்தர சோழரின் புதல்வர்களிடம் எவ்வளவு அபிமானம் கொண்டவர்கள் என்பது உனக்குத் தெரியாதா! இன்றைக்கு நீயே பார்த்தாய். இந்தப் பழையாறை நகருக்கு இன்று அருள்மொழிவர்மனோ, ஆதித்த கரிகாலனோ வந்திருந்தால் மக்கள் எப்படித் திரண்டு கூடி வரவேற்றிருப்பார்கள்? இந்த ஊர் மக்கள் ஒரு காலத்தில் உன்னிடமும் அன்புடனே தான் இருந்தார்கள். பழுவேட்டரையர்களுடன் நீ உறவு பூண்டதிலிருந்து உன்னை மக்கள் வெறுக்கவே தொடங்கி விட்டார்கள்."

"தாயே! மக்களின் அபிமானத்தைப் பற்றி நான் சிறிதும் கவலைப்படவில்லை. மக்களின் அபிமானம் என்னத்துக்கு ஆகும்? மக்கள் ஆளப் பட வேண்டியவர்கள், சிம்மாசனத்தில் யார் வீற்றிருந்து அரசு செலுத்துகிறார்களோ அவர்களிடம் மக்கள் பக்தி செலுத்த வேண்டியவர்கள்!"

"மகனே! உனக்குப் போதனை செய்திருப்பவர்கள் அரசியல் நீதியின் ஆரம்பத் தத்துவத்தைக்கூட உனக்கு உணர்த்தவில்லை. மக்களின் அபிமானம் இல்லாமல் எந்த அரசனும் நீடித்து அரசு செலுத்த முடியாது. அப்படி அரசு புரிவதில் புண்ணியமும் இல்லை!"

இவ்வாறு அந்தப் பெருமூதாட்டி சொல்லிக் கொண்டிருந்தபோது, அரண்மனை வாசலில் ஒரு பெரும் ஆரவாரம் கேட்டது.

ஓலக்குரலும், சாபக் குரலும், கோபக் குரலும், கேள்விக் குரலும் ஆயிரக் கணக்கான மனித கண்டங்களிலிருந்து எழுந்து, பெருங்காற்று அடிக்கும் போது சமுத்திரத்தில் உண்டாகும் பயங்கரப் பேரொலியாகக் கேட்டது.

(தொடரும்)

## தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு யாழ்.பொதுநூலகம் வழங்கும் ஆக்கங்கள்

# புத்தகங்களும் நெப்போலியனும்

பிரான்ஸ் நாட்டை ஆண்ட மாவீரன் நெப்போலியன். நெப்போலியனுக்குப் புத்தகங்கள் என்றால் கொள்ளை ஆசையாம். இதற்காக அவன் ஆயிரக்கணக்கான புத்தகங்களை கொள்ளை அடிக்கவும் தயங்கவில்லை என்கின்றார்கள். அசுர வேகத்தில் எதையாவது படித்துக் கொண்டிருப்பானாம் அவன்.

என்றாலும் எந்தப் புத்தகத்தையும் அவன் முழுவதுமாகப் படித்தது இல்லையாம்.

வரலாறு,தத்துவம், வானியல், விவசாயம்,பொறியியல், போர் மற்றும் அரசியல் உட்பட எந்தத் துறை சாந்த புத்தகத்தையும் அவன் விட்டு வைத்ததில்லை.

நேரம் கிடைக்கும் போதெல்லாம் புத்தகமும் கையுமாகவே இருந்தானாம். வீட்டில், பயணத்தில், ஏன் பொதுக் கூட்டங்களின் போது நேரம் கிடைக்கும் போது எல்லாம் ஏதாவது புத்தகத்தை சுவாரஸ்யமாக ரசித்து படித்துக் கொண்டிருப்பானாம்.

அந்தக் காலகட்டத்தில் வெளியாகும் எல்லா புது நாவல்களும் அவன் பார்வைக்கு வந்துவிட்ட கவிதைகளையும் அவன் விட்டு வைக்கவில்லை.

நெப்போலியன் பதவியிலிருந்த போது அவனது வீட்டில் 6000 இற்கு அதிகமான புத்தகங்கள் இருந்தன. இவற்றை தவிர செயின்ட் கிளாட், டிரியனான் உட்பட பல நகரங்களில் நூலகங்களை ஏற்படுத்தினான்.1801 ஆம் ஆண்டு 60 000 புத்தகங்கள் சேர்த்து வைத்திருந்ததாக வரலாறுகள் தெரிவிக்கின்றன.

நெப்போலியன் வாழ்க்கையின் இறுதி நாட்களில் ஹெலீனா தீவுகளில் தங்கியிருந்த காலத்தில் அவனுக்கு துணையாக இருந்தவை இந்தப் புத்தகங்களே.



த.மகஸ்ரீதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவையானது எதுவென தேர்ந்தெடுக்கத் தெரிந்து விட்டால் தேவையற்றதும், பரபரப்பும் தானாகவே விலகி விடும். – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தேர்தல் தாண்டவம் நடக்கிறது கண்டு களிப்புறுமினே!

அநுர குமார திஸாநாயக்க ஜனாதிபதியாகப் பதவி ஏற்ற கையோடு பாராளுமன்றம் கலைபட்டு எதிர்வரும் நவம்பர் மாதம் 14ஆம் திகதி பொதுத் தேர்தல் என அறிவிக்கப்பட்டது.

அவ்வளவுதான் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்காக கட்சிகளும் சுயேட்சைகளும் கங்கணம் கட்டிக் களமிறங்கியுள்ளன.

இப்படியானதொரு சூழ்நிலை ஏற்படும் என்பது எதிர்பார்க்கப்பட்டதே.

காரணம், தமிழ் அரசியலில் பலமான கட்சித் தலைமை இல்லாதபோது இந்நிலைமை ஏற்படவே செய்யும்.

இதை நாம் கூறும்போது, பலமான கட்சிகளுக்கு என்ன நடந்தது என நீங்கள் யாரேனும் கேட்கலாம்.

இங்குதான் தமிழ் அரசியல் கட்சிகள் தங்களின் சுயநலம் கருதித் தமிழ் மக்களை ஏமாற்றியுள்ளன.

தவிர, கட்சிகளுக்குள் ஒற்றுமை இல்லை. ஒருவரை ஒருவர் வெட்டி விழுத்துவதிலேயே கருசனை கொண்டுள்ளனர்.

இந்நிலையில் தமிழ் மக்களின் விவகாரங்களைக் கையாள்கின்ற அரசியல் தலைமைக்கு வெற்றிடம் ஏற்பட்டுள்ளது.

ஆக, அந்த வெற்றிடத்தை இட்டு நிரப்பக் கூடியவர்கள் நாம் என்பதாகப் பலரும் தேர்தல் களத்தில் குதிக்கத் தயாராகிவிட்டனர்.

இங்குதான் தமிழர்களின் ஒற்றுமை குலைந்து தமிழ் இனத்தின் அரசியல் எதிர்காலம் கேள்விக்குறியாகப் போகிறது.

அதிலும் எங்களின் துரதிர்ஷ்டம் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைத் தேர்தல்கள் நடைபெறாமல், எடுத்த எடுப்பில் பொதுத் தேர்தல் நடைபெறுவதாகும்.

ஆம், உள்ளூராட்சித் தேர்தலில் களமிறங்க இருந்தவர்கள், மாகாண சபைத் தேர்தலில் குதிக்க இருந்தவர்கள் அதிரடியாகப் பொதுத் தேர்தலில் களமிறங்க முடிவு செய்தனர்.

அதாவது, சாதாரண தரப் பரீட்சை மற்றும் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குக் காத்திருந்தவர்களுக்கு; நேரடியாகப் பட்டப் படிப்புச் சோதனை எடுத்துப் பட்டதாரி ஆகலாம் என்ற அறிவிப்பு வந்தால் நிலைமை எப்படி இருக்குமோ அதுபோல, உள்ளூராட்சித் தேர்தல் மற்றும் மாகாண சபைத் தேர்தலில் களமிறங்க இருந்தவர்களுக்கு சந்தர்ப்பம் கிடைத்த போது, பொதுத் தேர்தலில் இறங்கித் தோற்றாலும் பரவாயில்லை. ஒருக்கால் அதனையும் பார்த்துவிடலாமே என்று தீர்மானித்தனர்.

இதன் பிரகாரம் முன்பு எப்போதும் இல்லாதவாறு எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமிழர் தாயகத்தில் குறிப்பாக வட மாகாணத்தில் தேர்தலில் போட்டியிடுபவர்களின் எண்ணிக்கை கணிசமாக இருக்கும் என்பது மறுதலிக்க முடியாத உண்மை.

பரவாயில்லை. அந்தத் தில்லைக்கூத்தன் எங்களின் தமிழ் அரசியல் எப்படி இருக்கிறது என்பதை எம் மக்களுக்குக் காண்பிப்பதற்கு விருப்புகின்றான் போலும். அதனால் நடக்கிறது தேர்தல் தாண்டவம். நாம் கண்டு களித்து எங்கள் கர்மவினை தீர்ப்போம்.

# நீதிமன்ற குற்றவாளிகளை வேட்பாளர்களாக நியமிக்க வேண்டாம்

## பவ்ரல் அமைப்பு வேண்டுகோள்

(கொழும்பு)

நீதிமன்றம் குற்றவாளிகள் எனத் தீர்ப்பளித்தவர்களைப் பாராளுமன்றத் தேர்தல் வேட்பாளர்களாக நியமிக்கவேண்டாம் என தேர்தல் வன்முறைகள் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல் வேண்டுகோள் விடுத்துள்ளது.

நீதிமன்றத்தினால் ஊழல் மற்றும் ஏனைய குற்றங்களில் ஈடுபட்டவர்கள் என தண்டனை விதிக்கப்பட்டவர்களை வேட்பாளர்களாக நியமிப்பதை அரசியல் கட்சிகள் நியமிக்கக் கூடாது என பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சட்ட நடவடிக்கைகளை எதிர்கொள்வோரை வேட்பாளர் பட்டியலில் சேர்த்தால் குறிப்பிட்ட அரசியல்கட்சிகள் பொது மக்களிற்குப் பதில் சொல்ல வேண்டியிருக்கும் என அவர் எச்சரித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் வன்முறையற்ற விதத்தில் இடம் பெற்றுள்ள சூழ்நிலையில் அரசியல் கட்சிகளை சுத்தம் செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

தேசியப் பட்டியல் வேட்பாளர்களாக நியமிப்பதற்கு தகுதியானவர்களை அரசியல் கட்சிகள் தெரிவு செய்ய வேண்டும்என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பட்டியலில் ஒரு வேண்டத்தகாத வேட்பாளர் நியமிக்கப்பட்டாலும் அது ஒட்டுமொத்த கட்சிக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் என ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

விரும்பத்தகாத அரசியல்வாதிகள் மீண்டும் தெரிவு செய்யப்படுவதை தவிர்க்கும் விதத்தில் மக்கள் வாக்களிக்க வேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ம-7)

## ஒன்லைன் நிதி மோசடி வெளிநாட்டுக் குழு கைது

(கொழும்பு)

அவிசாவளையில் உள்ள ஹோட்டல் ஒன்றிலிருந்தும் ஹங்வெல்லவில் உள்ள தனியார் நிறுவன மொன்றிலிருந்தும் இயங்கி வந்த ஒன்லைன் நிதி மோசடி வலையமைப்பில் ஈடுபட்ட வெளிநாட்டவர்கள் குழுவொன்றை குற்றப் புலனாய்வுத் திணைக்களம் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர்கள் சமூக ஊடக தளங்கள் மற்றும் கையடக்க தொலைபேசிகளைப் பயன்படுத்தி ஒன்லைன் நிதி மோசடியில் ஈடுபட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

மோசடியில் ஈடுபட்ட 29 சீன ஆண்கள், ஒரு சீனப் பெண், ஒரு இந்தியப் பிரஜை, மூன்று பெண்கள், இரண்டு தாய்லாந்து ஆண்கள் மற்றும் நான்கு தாய்லாந்து பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன் போது 499 கையடக்க தொலைபேசிகள் மற்றும் 24 மடிக்கணினிகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில், குறித்த சம்பவம் தொடர்பான விசாரணைகளை குற்றப்புலனாய்வு பிரிவினர் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7)

## இலத்திரனியல் சிகரட் வர்த்தகர் கைது

20 இலட்சத்து 60 ஆயிரத்து 636 ரூபா பெறுமதியான இலத்திரனியல் சிகரட்டுகளுடன் வர்த்தகர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து விமான நிலைய பொலிஸ்போதைப்பொருள் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நீர்கொழும்பு, பெரிய முல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 36 வயதுடைய வர்த்தகரே கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மலேசியாவிலிருந்து கடந்த 5 ஆம் திகதி அதிகாலை 1.00 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

இதன்போது, விமான நிலைய பொலிஸ்போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர் கொண்டு வந்த பயணப் பொதியிலிருந்து 1,105 இலத்திரனியல் சிகரட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

பின்னர், கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக சுங்க அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டதையடுத்து சந்தேக நபருக்கு எதிராக 5 இலட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## தந்தையின் வங்கி அட்டையைப் பயன்படுத்திய மகன் பொலிஸாரால் கைது

(கண்டி)

தந்தையின் பணப்பரிமாற்ற வங்கி அட்டையை பயன்படுத்தி 37ஆயிரத்து 160 ரூபா பணத்தை மோசடி செய்த 35 வயதுடைய மகன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நல்லதண்ணி பொலிஸ் பிரிவில் உள்ள லக்சபான தோட்ட எமிலட்டன் பிரிவில் இடம்பெற்றுள்ளது.

இது குறித்து தந்தை செய்த புகாரைத் தொடர்ந்து அவரது மகன் மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி புஷ்பகுமாரவின் பணிப்புரையில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7)

## மின்சாரம் தாக்கியதில் ஆசிரியை உயிரிழப்பு

(கொழும்பு)

பெலியத்தை, தெத்துவாவெல தம்பேஆர பகுதியில் ஓய்வுபெற்ற பாடசாலை ஆசிரியை ஒருவர் மின்சாரம் தாக்கியதில் உயிரிழந்துள்ளதாக பெலியத்தை பொலிஸார் தெரிவித்தனர்.

74 வயதுடைய திருமணமாகாத ஓய்வுபெற்ற பாடசாலை ஆசிரியை ஒருவரே உயிரிழந்துள்ளார்.

இவர் தனது காணிக்குச் சென்று மீண்டும் வீடு நோக்கிச் சென்று கொண்டிருக்கும் போது மற்றுமொரு காணியில் பன்றிகளை வேட்டையாடுவதற்காக பொருத்தப்பட்டிருந்த மின்கம்பியில் சிக்கி மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பெலியத்தை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ம-7)

## யானை தாக்கியதில் வான் சாரதி மரணம்

ஹயஸ் வான் ஒன்றை காட்டு யானை தாக்கியதில் வானின் சாரதி உயிரிழந்துள்ளார்.

பொலநறுவை, கிரித்தல - பக்கமுன பிரதான வீதியில் சோமியேல பகுதியில் பயணித்த வானே காட்டு யானையின் தாக்கு தலுக்குள்ளாகியுள்ளது.

இந்தப் பரிதாபகரமான சம்பவம் நேற்று இடம் பெற்றுள்ளதாக பக்கமுன பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதில் பொலநறுவை, பலுகஸ்தமன - சேவாகம பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய வானின் சாரதியே உயிரிழந்துள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளமையில் கல்வி சிலையில் எழுத்து

எம் எல்லோருக்கும் பொழுது விடிகின்றது, பொழுது படுகின்றது, எல்லோரது வாழ்க்கையும் உருண்டோடிக் கரைந்து கொண்டிருக்கின்றது. இதற்குப் புலம் பெயர்ந்தவர்கள் நிலம் பெயராதவர்கள் எவருமே விதிவிலக்கில்லை.

மனிதர்களாக பிறந்தவர்கள் அனைவருக்கும் தேவை களுக்குக் குறைவேயில்லை. சிலருக்குப் பல தேவைகள் நிறைவேற்றப்பட்டிருந்தாலும் பலருக்குச் சில தேவைகளைக்கூடப் பூர்த்தி செய்ய முடியாத நிலைதான் யதார்த்தமாக இருக்கின்றது.

தேவைகள் பெரும்பாலானவைகள், ஆசையின் அடிப்படையில் எழுந்தவைகள். அது அவரவர்கள் தனிப்பட்ட விடயம். அவைபற்றி கல்வி அலசுவதல்ல எமது நோக்கம்.

மேலும் பல தேவைகள் உணர்வுகளின் வெளிப்பாடுகளாக விளங்குகின்றன, அவைகளும் உயர்ந்த எண்ணங்களால் உந்தப்பட்டவை, தரக்குறைவான சிந்தனைச் சிதறல்களால் உருவானவை என இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

இவற்றைத்தவிர மனிதர்கள் தனியாகவும் சமூகமாகவும் தம்மை நிலைநிறுத்தி, அவரவர்களுக்குள்ள கடமைகள் என்ன? அவர்களின் உரிமைகள் என்ன? என்ற அடிப்படைக் கேள்விகளின் பிரதிபலிப்பாக அவர்களின் அடிமனதில் உறங்குநிலை கொண்டுள்ள தேவைகள்.

இத்தேவைகள் பூர்த்தி செய்யப்படாத வரைக்கும், எவரும் பூரணமான திருப்தி கொண்ட மனிதர்களாக வாழ்ந்து மறைந்தார்கள் என்றோ, வாழ்கின்றார்கள் என்றோ அர்த்தம் கொள்ளமுடியாத, பலராலும் மறக்கப்பட்ட, மறைக்கப்பட்ட யதார்த்த பூர்வமான உண்மையாகும். சிந்தனைத் திறன் கொண்ட மனிதர்கள் அனைவரும் ஏற்றுக் கொண்டேயாக வேண்டும்.

நாம் அனைவரும் இலங்கையர்கள் என்ற அடிப்படையில் நமக்கு பிரித்தானிய ஆட்சியாளர்களிடமிருந்து சுதந்திரம் கிடைத்து எழுபத்து ஐந்து வருடங்கள் கடந்து விட்டன, அரசியலில், அரசியல் வாதிகளும் அரசியல் கட்சிகளை உருவாக்கி, பலர் வலம் வந்து போனார்கள். இன்னும் ஒற்றுமைக்காக மல்லுக் கட்டிக்கொண்டே இருக்கின்றார்கள். இதன் விளைவாகப் பல இயக்கங்கள் பலராலும் உருவாக்கப்பட்டு தங்களுக்குள்ளேயே முட்டி மோதி அழித்து, இனி இழப்பதற்கு ஒன்றுமில்லை என்ற நிலையை ஏற்படுத்திய பின்னரும் முயலுக்கு மூன்று கால் என்ற நிலைப்பாட்டில் இருந்து விடுபடுவதாகத் தெரியவில்லை. காலம் உருண்டோடிக் கொண்டே இருக்கின்றது. எமது மக்களின் வாழ்க்கையில் எதிர பார்த்த மாற்றதிற்கு மாறாக புறக்காரணிகளினால் பலாத்காரமாகத் திணிக்கப்பட்ட வன்முறைக்கு உட்படுத்தப்பட்டுள்ள ஒரு இனமாகவே தொடர்கின்ற நிலையைத்தான் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

இந்நிலையில் இருந்து எமது இனம் மீட்சி பெற வேண்டுமாயின் இன்றைய மூத்த தலை முறையினர் மத்தியில் உள்ள அறிவார்ந்த மக்களிடத்தில் தூர நோக்குடன் சிந்தித்து ஒரு முகமாக செயலாற்ற வேண்டிய தேவை, எம்முன்னே எமது அதி முக்கியத்துவம் வாய்ந்தது மட்டுமல்லாமல் அதுவே எல்லோரினதும் தலையாய கடமையாகவும் உருவெடுத்துள்ளது.

அப்படி என்ன கடமை என எம் எல்லோர் மனங்களிலும் எழுகின்ற கேள்வி, புரிந்து கொள்ளக்கூடிய ஒன்றே. நாம் அனைவரும் இலங்கையில் பிறந்து வாழ்ந்த, வாழ்ந்து கொண்டிருக்கின்ற, தமிழ் மக்கள். எமது கடந்தகால இலங்கை வாழ்க்கையில் நாம் அனுபவித்த பல விடயங்களை இன்றைய தலைமுறைச் சமூகத்தினர், இழந்து விட்டது மட்டுமல்லாமல் அந்த இழப்பினை ஈடு செய்ய முடியாதவர்களாக மயக்க நிலையில் அதற்கு தங்களை வலுக்கட்டாயமாகப் பழக்கப்படுத்திக் கொள்கிறார்கள். இது எமது இனம் முற்றாக அழிந்து அடையாளம் அற்றுப்போகப் போகின்றது என்பதற்கான இன்றைய கள யதார்த்தமாகும்.

ஈழத்தமிழர்களின் இன்றைய பரிதாப நிலையில் இருந்து மீட்சி பெறுவதற்கு என்னதான் வழி ?.

இப்போதைய தலைமுறையினர் தீர்க்கமானதும், சிந்தனைத் திறனுள்ள தூரநோக்குடன், நடைமுறைச் சாத்தியமான முடிவுகளுக்கு செயல் வடிவம் கொடுத்து புதிய தலைமுறையினரை உருவாக்க, நிறைவேற்ற வேண்டிய வேலைத் திட்டங்களும் செயற்பாடுகளும் எமது தலையாய கடமைப்பாடாக எம் எல்லோர் முன்னும் உள்ளது.

எம் இனம் எழுபத்து ஐந்து வருட கால அரசியலிலும், முப்பது வருட கால விடுதலைப் போரினாலும், அதைத் தொடர்ந்து கடந்த பதினைந்து வருட கால மந்த நிலையில் கண்ட உண்மையான யதார்த்தம் என்ன? என்று பார்த்தோமானால், சொந்த மண்ணிலேயே வாழ்ந்து கொண்டிருப்பவர்கள், தமது அடையாளங்களைப் படிப்படியாக இழந்து, திறந்தவெளிச் சிறைச் சாலையில் வாழ்கின்ற நிலையும், கிடைக்கின்ற முதல் சந்தர்பத்திலேயே வெளிநாடுகளுக்கு மூட்டைகட்ட விருப்பம் கொண்டவர்களாகவும், நாட்டைவிட்டு வெளியேறியவர்கள் அனைவரும் தமது அடையாளங்கள் அனைத்தையும் தொலைத்து, பொருளாதாரத்தில் மட்டும் தம்மைத் தக்க வைத்துக் கொண்டுள்ள ஒரு சமூகமாக மாறிக் கொண்டு இருப்பதுதான் இன்றைய நிலைப்பாடாக இருப்பது கண்கூடு. இந்த நிலைக்கு விமோசனம் உண்டு என்று கூறுவது இலகுவான விடயமல்ல. ஆனால் நம்பிக்கை தருகின்ற சிந்தனையாகும்.

"ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது" என்பது நம்முன்னோர் வாக்கு. 'முற்றிய மூங்கில் வளையாது', வளைக்க வேண்டுமெனின் இளம் தளிராக இருக்கும் போதே ஏற்ற வகையில் வளைத்து விட்டால் வளைவு எப்படி நிரந்தரமாகி விடுமோ அவ்வண்ணமே சமுதாய மாற்றம் ஐந்து வயதுக்குள்ளவர்களிடம் இருந்துதான் உருவாக்கப் படவேண்டும். புதிய யுகம் பிறக்க வேண்டுமாயின் குழந்தைகளிடம் இருந்துதான் உருவாக வேண்டும்.



அப்படியான ஒரு தலைமுறையினரை உருவாக்க வேண்டிய கடப்பாடு நம் எல்லோரினதும் ஆகும். இதுவரை ஒன்றுமே நடக்கவில்லை என்பதல்ல சரியான புள்ளியில் முழுக்கவனம் செலுத்தப்படவில்லை. பல வேலைத் திட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தாலும் உடைந்த சுவருக்கு மாறிமாறி வர்ணம் பூசுகின்ற நிகழ்வுகளாகத் தான் கருதப்படுகின்றது. நிலையான, உறுதியான மாற்றத்தின் மூலம் புதிய தலைமுறையினர் உருவாக்கப்பட வேண்டும்.

அதற்கு தாய், தந்தை, ஆசிரியர் என்ற மூன்று பேரினதும் ஒருமித்த பங்களிப்பினூடாக முக்கூட்டு முயற்சியாக உருவாக்கப்பட வேண்டும். பொறுப்புள்ள இளம் தாய்,தந்தையர்களின் மனதில் மாற்றம் ஏற்பட வேண்டும். அவர்கள் மத்தியில் இருந்து, பயிற்றப்பட்ட ஆசிரிய, ஆசிரியைகள் உருவாக்கப்பட வேண்டும். அவர்கள் மூலம் இளம் பெற்றோர்கள் தமது குழந்தைகளுக்கு தூரநோக்குள்ள அடிப்படை ஆரம்பக் கல்வியைப் புகட்டுவதில் பெரும் பங்கு வகிப்பதனை உறுதி செய்ய முடியும். இதன் மூலமாகத்தான் புதிய, வலுவான, சிந்தனைத்திறன் மிக்க ஒரு தலை முறையினரை உருவாக்க முடியும். முன்பள்ளிகளே முதற் பள்ளிகள். இதில் நாம் அனைவரும் பங்காளிகள். எமது பங்களிப்புக்கள் அவசரமாகவும் அத்தியாவ்சியமாகவும் தேவைப்படுகின்றது.

இலங்கை சுதந்திரம் அடைந்து கடந்த எழுபத்து ஐந்து வருடங்களாக இலங்கை அரசாங்கம், இலங்கையில் முன்பள்ளிகள் சம்பந்தமாகவோ அல்லது அங்கே கடமையாற்றுகின்ற ஆசிரியர்கள் மற்றும் இளம் குழந்தைகள் சம்பந்தமாகவோ எந்தவிதமாகவும் கரிசனையும் கொண்டிருக்கவில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாக "மொன்டெசூரி" என்ற பெயரில் தனியார் பாலர் பாடசாலைகள் இயங்கி வந்திருக்கின்றன. எந்தவிதமான சட்டங்களுக்கும் உட்படாத, கட்டுப்பாடுகள், வரையறைகள் இல்லாத, இலாப நோக்கத்தை மட்டுமே மையப்படுத்தி இயங்கி வந்திருக்கின்றன. இங்கு, சமூகத்தில் வசதி படைத்தவர்களின் குழந்தைகளுக்கு மட்டுமே அந்த வாய்ப்புகள் கிடைக்கப் பெற்றது. சமூகத்தில் வசதி குறைந்த பெரும்பான்மையான குடும்பங்களினால் அவ்வசதியை பெற்றுக்கொள்ள முடியவில்லை. ஆனால் தொடர்ந்து வந்த, உள்நாட்டுப் போரின் காரணமாக ஒட்டுமொத்தமாக சகல மட்டதிலும் மாணவர்களின் கல்வி சீர் குலைந்து முன்னர் அதி உச்சத்தில் இருந்த கல்வித் தகைமை இப்பொழுது அடிமட்டத்திற்கு தள்ளப்பட்டு, கடைநிலையில் இருக்கின்றது.

இலங்கையில் இலவசக் கல்வி முறை அறிமுகப் படுத்தப்பட்ட பின்னரான காலப்பகுதியில் தரப்படுத்தல் கெடுபிடிகள் இருந்தபோதும் ஏதோ ஒரு வகையில் பிழைத்துக் கொள்ள வழிவகைகள் இருந்தன. ஆனால் போருக்குப் பின்னர் திட்டமிட்ட சதியினாலும், எம்மினத்தில் உள்ள கோடரிக் கொம்புகளின் சமூகவிரோதச் செயற்பாடுகளினாலும் நிலைமை மிகவும் மோசமடைந்து போவதைத் தடுக்கும்முகமாக சமூகத்தில், ஆங்காங்கே நல்ல உள்ளங்கொண்டவர்களினால் பல முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதனால் எல்லாம் சரியாகிவிட்டது என்று அர்த்தமல்ல.

எனவேதான் இதன் அடுத்த கட்டமாக பல நல்ல சமுதாய நலன் விரும்பும் முன்னோடிகளினால் கல்வி சம்பந்தமாக காத்திரமான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதன் ஒரு அங்கமாக வட மாகாணத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்ற தனியார் முன்பள்ளிகளின் தரத்தை, தற்கால நவீன சூழ் நிலைக்கு ஏற்றவகையிலும் இளம் சிறார்களின் மனவளர்ச்சி, மூளை விருத்தி, உடல்நல சுகாதார தேவைகளை கருத்தில் கொண்டு முன்பள்ளி களில் பணிபுரிகின்ற ஆசிரியர்களுக்கு சரியான புரிதலை ஏற்படுத்தி, உயரிய பயிற்சியினை உள்ளடக்கிய அதி சிறந்த தராதரத்தை, அவர்களுக்கு வழங்கும் முகமாகவும், அவர்களுடைய வாழ்வாதாரத்தை உயர்த்தும் முகமாகவும் புதிய இரண்டு வருட "டிப்ளோமா" தராதர படிப்பை மேற்கொள்வதற்கு, இலங்கையில் கல்வி அபிவிருத்திக் குழுமமும், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகமும் இலங்கை கல்வி அமைச்சும் குறிப்பாக வடமாகாண கல்வித் திணைக்களமும் இணைந்து இவ்வருடம் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்த உடன்படிக்கையில் கைச்சாத்து இட்டுள்ளனர். இந்த உடன்படிக்கையின் பிரகாரம் யாழ்ப்பாண பல்கலைக்கழகம் சார்ந்த கல்வி அதிகாரிகள் டிப்ளோமா பரீட்சைக்குரிய பயிற்சிகள் உள்ளடங்கிய பாடத்திட்டத்தினை தயாரித்து வகுப்புக்களையும், பரீட்சைகளையும், பட்டமளிப்பையும் நடத்தவும், கல்வித்திணைக்கள அதிகாரிகள் தகுதி வாய்ந்த விரிவுரையாளர்களை தெரிவு செய்து பணியில் அமர்த்தவும் தேவையான நிதியினை இலங்கை கல்வி அபிவிருத்திக்கான குழுமம் வசதி படைத்த புலம் பெயர் தமிழ் மக்கள் ஆளுக்கு ஒரு ஆசிரியருக்காவது உதவி என்ற அடிப்படையில் அவர்களது பங்களிப்பினைப் பெற்று இத்திட்டத்தினை நிறைவேற்றத் தேவையான நிதியினை திரட்டத் தீர்மானிக்கப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இரண்டு வருட டிப்ளோமா பட்டப்படிப்பினை முடிப்பதற்கு மொத்தமாக அறுபது ஆயிரம் இலங்கை ரூபாக்கள் (60,000) தேவைப் படுகின்றன. இக்கற்கை நெறியின் மூலம் 2026 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தில் 60 மாணவ ஆசிரியர்களும், கிளிநொச்சி வளாகத்தில் 60 மாணவ ஆசிரியர்களுமாக மொத்தமாக 120 ஆசிரியர்களும், வவுனியா பல்கலைக்கழகத்தில் ஐம்பது மாணவ ஆசிரியர்களுமாக, அவர்களது இரண்டாம் வருட முடிவில் பட்டம் பெற்று தகுதி பெற்ற ஆசிரியர்களாக வெளியேறுவார்கள். முதற்கட்டமாக அவர்களது தகைமை அடிப்படையில் வடமாகாணத்தின் இரண்டு பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த மூன்று வளாகங்களில் மொத்தமாக நூற்றி நாற்பத்து மூன்று மாணவ ஆசிரியர்கள் இரண்டு வருட பட்டப்படிப்பை இரண்டு குழுக்களாக ஆடி, புரட்டாதி மாதங்களில் ஆரம்பித்துள்ளார்கள்.

வடமாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்கள் அடங்கலாக 1566 முன்பள்ளிகள் இயங்குகின்றன. அங்கு 32 994 முன்பள்ளிச் சிறார்கள் இணைக்கப்பட்டுள்ளார்கள். இவ் முன்பள்ளிகளில் பணிபுரிகின்றவர்களில், மாதாந்த வேதனமாக ரூபா 6000 பெறுகின்றவர்களும், தொண்டர் அடிப்படையில் உள்ள இளம் பெற்றோர்களுமாக 2987 பேர் சேவையில் ஈடுபட்டுள்ளனர். ஆசிரியர்களின் கற்றல், கற்பித்தல் ஆற்றலினைச் சர்வதேச தரத்திற்கு உயர்த்துவதன் மூலம், இரண்டு தொடக்கம் ஐந்து வயதான பாலர்களின் எதிர்காலத்தை கட்டுக்கோப்பான சீரிய பழக்க வழக்கங்கள், பண்பாட்டுடன் கூடிய, நவீன முன்னேற்றங்களையும் உள்வாங்கி, ஆரம்பக் கல்வியை தாய்மை அன்புடன் வழங்கி, புதிய தலைமுறையினரை உருவாக்குவது மட்டுமல்லாமல் எம் முன்னோர் எமக்கு விட்டுச் சென்ற இன, மொழி, சமய, கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களையும் சொந்த மண்ணின் மாட்சியையும் பேணிப் பாதுகாப்பதற்கும் அடைக்கப்பட்ட கதவுகளை திறந்து எதிர்காலம் ஒளிமயமானதாகவும் நம்பிக்கை நிரம்பியதாகவும் அமைய, இனி வருகின்ற தலைமுறையினர் வழி வகுக்க, இன்றைய தலைமுறையினராகிய நாம் உளமுவந்து எமது பங்களிப்பினைச் செய்ய முன்வர வேண்டும்.

சிவசம்புபரிமேலழகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்தலில்...

அலுவலகம் சம்பந்தப்பட்ட சர்ச்சைகள் காரணமாக, 2024 நவம்பர் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள தேர்தலில் குறித்த அரசியல் கட்சிகள் போட்டியிட முடியாது.

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளாக வேட்புமனுக்களைச் சமர்ப்பிக்க முடியாத அரசியல் கட்சிகள் பின்வருமாறு,

- ஈழவர் ஜனநாயக முன்னணி
- ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு
- எக்சத் லங்கா பொதுஜன பக்ஷய
- எக்சத் லங்கா மகாசபா கட்சி
- லங்கா ஜனதா கட்சி
- இலங்கை முற்போக்கு முன்னணி போன்ற கட்சிகள் தேர்தலில் போட்டியிட முடியாது. (ம-7)

## இலஞ்ச...

ஜனாதிபதியின் சட்டத்தரணி உதித இகலஹேவா தெரிவித்தார்.

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்தை நியமிப்பது தொடர்பில் உச்ச நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையிலேயே அவர் தனது இராஜினாமாக் கடிதத்தை சமர்ப்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ம-7)

## கட்சிகளின்...

அந்த வர்த்தமானியில் இதுவரை அரசியல் கட்சிகளுக்கு வழங்கப்படாத சின்னங்களும் வெளியிடப்பட்டுள்ளன. (ம-7)

## கட்டுமரம்...

நேற்று உயிரிழந்துள்ளார்.

இதில் தும்பளையைச் சேர்ந்த திருச்செல்வம் ஞானப்பிரகாசம் (வயது- 69) என்பவரே உயிரிழந்தவராவார்.

நேற்றுத் திங்கட்கிழமை காலை 7.30 மணியளவில் கடலுக்கு அவர் மீன் பிடிப்பதற்காகக் கட்டுமரத்தில் சென்றுள்ளார். கரையிலிருந்து 300 மீற்றர் தூரத்தில் அவர் சென்ற கட்டுமரம் அலையில் புரண்டுள்ளது. இதில் அவர் கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

கடலில் சடலமாகக் காணப்பட்டதை அடுத்து சக மீனவர்கள் உடலைக் கரைக்குக் கொண்டு சென்று பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் ஒப்படைத்தனர்.

இம்மரணம் தொடர்பில் கரவெட்டி திடீர் மரண விசாரணை அதிகாரி வே. பாஸ்கரன் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## பணிப்பாளர்...

பெண் அதிகாரி ஒருவரை நியமிக்க முன்மொழியப்பட்டுள்ளது.

தற்போது குற்றப்புலனாய்வுத்திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளராக பணியாற்றும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் இமேஷா முத்துமால இந்தப் பதவிக்கு முன்மொழியப்பட்டுள்ளார்.

இலங்கைப் பொலிஸ் வரலாற்றில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளராக நியமிக்கப்பட்ட முதலாவது பெண் அதிகாரியும் இவராவார். (ம-7)

## பருத்தித்துறை...

வம் இடம்பெற்றிருந்தது.

பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கான வழக்கமான வாராந்தக் கலந்துரையாடல் நேற்று மாலை 3.00 மணிக்குப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் தலைமையில் இடம்பெற்றுக் கொண்டிருந்த சிறிது நேரத்தில் திடீர் மின் தடை ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து மின் பிறப்பாக்கியை இயக்குவதற்காக உத்தியோகத்தர் சென்றபோதே மாநாட்டு மண்டபத்தின் வெளிப் பகுதியில் மின் இணைப்பு பொருத்தப்பட்ட இடத்தில் தீ பற்றி எரிவதை அவதானித்துள்ளார்.

இதுகுறித்து தகவல் தெரிவிக்கப்பட்டு அங்கிருந்த உத்தியோகத்தர்கள் உடனடியாக வெளியேற்றப்பட்டதுடன் அவசர தீயணைப்புக் கருவியின் உதவியுடன் தீ பரவல் கட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் பலர் மண்டபத்திற்குள் இருந்த நிலையில் தீ பரவல் உடனடியாகவே கட்டுப்படுத்தப்பட்டதன் மூலம் பெரும் அனர்த்தம் தவிர்க்கப்பட்டுள்ளது. (ம-7,60)

## கட்சிப் பதவி...

ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்துள்ளதையடுத்து, அவர் தனது கட்சித் தலைவர் பதவியை துறந்துள்ளார் என்று தெரியவருகின்றது.

அண்மையில் நடந்த தலைவர் தெரிவில் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட சி.சிறீதரன் அல்லது மூத்த துணைத்தலைவர் சி.வி.கே. சிவஞானம் ஆகிய இருவரில் ஒருவர் கட்சியின் தலைமையை வகிக்க வேண்டுமெனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழரசுக் கட்சியின் அனைத்துப் பொறுப்புகளில் இருந்தும் தான் விலகுவதாக கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ள போதிலும் அவர் கடிதம் எதனையும் எனக்கு அனுப்பி வைக்கவில்லை என கட்சியின் செயலாளர் வைத்திய கலாநிதி ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார். (ம-7)

## தமிழரசுக்...

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கான தமிழரசுக் கட்சியின் வேட்பாளர்களை இறுதிப் பட்டியலை நியமனக்குழு வவுனியாவில் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ளது.

இதனடிப்படையில், யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களுக்கான வேட்பாளர்களாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், எம்.ஏ. சுமந்திரன், எஸ்.சி.சி. இளங்கோவன், கேசவன் சயந்தன், சந்திரலிங்கம் சுகிர்தன், சுரேக்கா சசீந்திரன், இமானுவல் ஆர்னோல்ட், கிருஸ்ணவேணி சிறிதரன் மற்றும் தியாகராஜா பிரகாஷ் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதன் பின் ஊடக சந்திப்பில் முன்னாள்பாராளுமன்ற உறுப்பினரும், கட்சியின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் அமர்ந்து கொண்டு குறித்த சந்திப்பில் கலந்து கொள்ளுமாறு முன்னாள்பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனை அழைத்துள்ளார்.

ஆனால் அவர் ஊடக சந்திப்பில் கலந்து கொள்ளாமல் வெளியேறியுள்ளார்.

கட்சியின் இளைஞர் அணித் தலைவர் கி.சேயோன் மற்றும் ரஞ்சினி ஆகியோர் சிறீதரனை அழைக்குமாறு கோரியபோதும் அவர் அதை ஏற்காது வெளியேறிச் சென்றுள்ளதாகக் கூறப்படுகிறது.

இதனையடுத்து, எம்.ஏ.சுமந்திரன் பொதுச் செயலாளர் ப.சத்தியலிங்கத்துடன் இணைந்து ஊடக சந்திப்பை நடத்தியிருந்தார். (ம-7)

## தலையில் கல் விழுந்து சிறுவன் உயிரிழப்பு

கேகாலை நூரிய பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பல்லேஹாகே பிரதேசத்தில் உள்ள வீடொன்றுக்கு அருகில் தலையில் கல் வீழ்ந்து சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளான்.

கித்துல்கல பல்லேஹாகே பிரதேசத்தை சேர்ந்த 11 வயதுடைய சிறுவனே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தின் போது, உயிரிழந்த சிறுவனின் தந்தை வீட்டின் மேல் பகுதியில் உள்ள மலைப்பாதையை சுத்தம் செய்து கொண்டிருந்துள்ளார்.

இதன்போது, வீட்டிற்கு அருகில் இருந்த சிறுவனின் தலையில் கல் வீழ்ந்துள்ள நிலையில் காயமடைந்த சிறுவன் தெரணியகல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2024.10.07
சீட்டிழுப்பு இலக்கம் 5618
T 3 8 0 2 6 0
அத சம்பத
T 0 2 6 0
சீட்டிழுப்பு இலக்கம் 193

தன நிதானய
திகதி - 2024.10.07
சீட்டிழுப்பு இலக்கம் - 1648
N 05 44 76 78 N
49707

மெகா பவர்
திகதி 07/10/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1966
B 06 12 30 51 60
81671

லக்கி 7 VIP
திகதி 2024.10.07
சீட்டிழுப்பு இலக்கம் 0444
P 7 7 0 2 8 0 P

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3860
சீட்டிழுப்பு திகதி 07.10.2024
E 14 29 44 65
E 79884

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.10.07
சீட்டிழுப்பு இலக்கம் 927
விருச்சிகம் 18 25 29 48 விருச்சிகம்
39332 22

உத்தியோகபூர்வ முடிவுகள்
07.10.2024 வெற்றி வாரம் 326 வர்ணம் ஊதா
ஆங்கில எழுத்து T
6 9 9 4 6 7
72801
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.23,349,872.00

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2592 வர்ணம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 07.10.2024 தினம் திங்கள்
13 37 66 71 U
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 61,737,991.20

சனிதா
திகதி 2024.10.07 வெற்றி வாரம் 4753
21 45 50 62 G
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.53,297,471.60
48112

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4304 வர்ணம் மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2024.10.07 தினம் திங்கட்கிழமை
14 40 51 59 விருச்சிகம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 5,102,604.40
106711

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
V 13 06 24 68 70
1768 பச்சை 07.10.2024 திங்கள்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 549,088,011.40

ஜயோதா Jayoda
திகதி 2024.10.07 வெற்றி வாரம் 2066 வர்ணம் செம்மஞ்சள்
03 23 25 44 A
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.25,688,910.00

ADA KOTIPATHI
திங்கட்கிழமை
வெற்றி வாரம் : 2418
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.72,605,163.20
12 22 35 67 X
612495


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணத்தை திருடிய குற்றச்சாட்டில்

# நடத்துனர் தென்னை மரத்தில் கட்டி வைத்து சித்திரவதை

(கொழும்பு)

தனியார் பேருந்தொன்றில் பணத்தை திருடியதாக குற்றஞ்சாட்டப்பட்ட நடத்துனரை தனியார் பேருந்து உரிமையாளர் தென்னை மரத்தில் கட்டி வைத்து அடித்து சித்திரவதை செய்த சம்பவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (7) களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவிலுள்ள ஓந்தாச்சிமடம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக தெரியவருவதாவது,

களுவாஞ்சிக்குடி மகிளூர் பிரதேசத்தைச் சேர்ந்த தனியார் பேருந்து உரிமையாளரின் கல்முனை - மட்டக்களப்பு போக்குவரத்து சேவையில் ஈடுபட்டுவரும் பேருந்தில் நடத்துனராக அம்பாறை மத்திய முகாம் பிரதேசத்தைச் சேர்ந்த 27 வயது இளைஞர் கடமையாற்றி வந்துள்ளார்.

இந்நிலையில், அந்த பேருந்தில் இருந்து பணத்தை திருடியதாக நடத்துனர் மீது தனியார் பேருந்து உரிமையாளர் குற்றஞ்சாட்டி கடமையிலிருந்த இளைஞரை நேற்று பகல் ஓந்தாச்சிமடம் பிரதான வீதியிலுள்ள பாழடைந்த காணியொன்றுக்குள் இழுத்துச் சென்று அங்கிருந்த தென்னை மரத்தில் கட்டிவைத்து கட்டையால் தாக்கிச் சித்திரவதை செய்துள்ளார்.

இதனைக் கண்ட பொதுமக்கள் கடும் கவலை தெரிவித்து, பொலிஸாருக்கு அறிவித்த நிலையில், சம்பவ இடத்துக்கு பொலிஸார் சென்றுள்ளனர்.

அதன் பின்னர், மரத்தில் கட்டி வைத்து அடித்தவரை அங்கிருந்து பொலிஸார் அப்புறப்படுத்தியுள்ளனர். இது தொடர்பாக களுவாஞ்சிக்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.(ம-7)


## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் உரும்பிராயில் 18 நிலப்பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. செல்லத்துரை வீதி முகப்புடன்

- 2 பரப்பாகவும் 1 1/2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட 20 அடிப் பாதையுடன்
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி
- உரும்பிராய் சந்தி 750m தூரம்
- உரும்பிராய் சந்தியில் இருந்து கோப்பாய் செல்லும் பிரதான காபற்வீதி 250m தூரம்
- நன்னீர் ஊற்று. செம்மண் நிலம், நல்ல சூழல்
- பார்வையிடும் நேரம் : காலை 6.00 - மாலை 6.00 வரை

(2243)

**077 288 0152, 076 739 0413**

## TECHNO WORLD

A/L தொழில்நுட்பப்பிரிவு

விசேட செயலமர்வு

| | |
|---|---|
| 15,16,17 October 2024 | தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் |
| 18,19 October 2024 | பொறியியல் தொழில்நுட்பவியல் உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல் |
| 20,21 October 2024 | ICT, விவசாய விஞ்ஞானம், புவியியல், கணிதம் |

இடம்: வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்.

(C-1356)

தொடர்புகளுக்கு : **077 017 5346**

## அகரம்

உயர்நிலைக் கல்லூரி

AHARAM HIGH STANDARD COLLEGE

காங்கேயன்துறைச்சாலை

மல்லாகம் | கொக்குவில்

புதிய கல்வி ஆண்டு -2024

புலமைப்பிரிசிற் பரீட்சை எழுதிய மாணவர்களிற்கான

புதிய தரம் 06 தமிழ் மொழி மூல, English Medium வகுப்புக்கள் ஆரம்பம்

12.10.2024 (சனிக்கிழமை)

விஜயதசமி நன்னாள் அன்று மாலை 3.02 - 4.32

அனுமதிகளை 09.10.2024 இருந்து பெற்றுக் கொள்ளலாம்

குறிப்பு :
ஆரம்பிக்கும் நாள் முதல் தைமாதம் வரை நடைபெறும் வகுப்புக்களிற்கு கட்டணம் எதுவும் அறவிடப்படமாட்டா!

(2251)

"அகரம் எம் தேசக் குழந்தைகளின் ஏற்றமிகு எதிர்காலம்"

## வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நீகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-1352)

**076 825 7716** (ஆகாஸ்)

## வீடு வாடகைக்கு

ஸ்ரேசன் வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில் சந்தியில் இருந்து 200m தொலைவில், நல்ல குடியிருப்புச் சூழலில் அமைந்துள்ள வீடு வாடகைக்கு உண்டு.

(409)

WhatsApp : + 94 77 11 55 909

## காணி விற்பனைக்கு

யாழ். மல்லாகம் பழைய கோட்ஸ் அடி வீதி K.K.S Road இல் 4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

- நன்னீர் ஊற்று
- குடியிருப்பு சூழல்
- பார்வையிடும் நேரம் காலை 7.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணி வரை

(2246)

**077 638 5683**
**076 755 8606**

## யாழ்ப்பாணம் - சென்னை விமான சேவைகள்

யாழ் - சென்னை விமானப் பயணச் சீட்டுக்கள்

36,500/= இலிருந்து விசேட விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

ஒரு வருட E-Visa இனை 9000/= ரூபாவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

(410)

APEX TRAVELS

0777 597 598, 076 3333 644

இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். CTB பஸ் தரிப்பிடத்திற்கு அருகில்)

## விசாக்கான (Show money)

வங்கி இருப்பு உறுதிப்படுத்தி தரப்படும்.

குறைந்த சதவீதத்தில்%

- Visit visa
- Student visa
- Fixed & saving

சகல நாடுகளுக்குமான விசா சேவைகள்

தொடர்புகளுக்கு : (402)

**075 033 6759**

## CANADA/ UK விசா சேவைகள்

Visit Visa | Student Visa

- மிக குறுகிய செயற்படுத்தல் காலம்
- மிகக் குறைந்த கட்டணங்கள்
- சட்டத்தரணி மூலம் ஒப்பந்தம்
- நேர்த்தியான ஆவண ஒழுங்குபடுத்தல்கள்
- ஏற்கனவே நிராகரிக்கப்பட்ட விசாக்கள் மீள விண்ணப்பித்து தரப்படும்.

(407)

12 வருட கால அனுபவம் மிக்க Winstar Visa Consultants உடன் இன்றே இணையுங்கள்

மேலதிக தொடர்புகளுக்கு முன்பதிவு செய்து நேரில் வரவும்

**Winstar Consultants Pvt Ltd**

45, Vembady Street, Jaffna.

071 071 6979

## அமெரிக்க லொத்தர் விசா

பதிவுகள் ஆரம்பமாகிவிட்டன

2026ல் நீங்களும் அமெரிக்காவில்...

ஒரு உறுதியான முடிவு உங்கள் வாழ்க்கையை மாற்றிவிடும்!

18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்

0768226244

எமக்கூடாக விண்ணப்பித்து வெற்றிபெற்ற ஏராளமானோர் அமெரிக்காவில்

குடும்பத்தினர்களுக்கு இரண்டு வாய்ப்புக்கள்

விண்ணப்ப முடிவு திகதி 05-11-2024

வெளிநாட்டில் வாழ ஒரு இலவச சந்தர்ப்பம்! தவறவிடாதீர்கள்!

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கொழும்பு 0777469777 | வவுனியா 0743900350 | மட்டக்களப்பு 0743900352 | திருகோணமலை 0768226237 | மன்னார் 0743900353 | முல்லைத்தீவு 0743900351 |
| புதுக்குடியிருப்பு 0764550673 | கிளிநொச்சி 0768226240 | யாழ்ப்பாணம் 0777068777 | கொடிகாமம் 0764550675 | சாவகச்சேரி 0768226242 | மானிப்பாய் 0768226238 |
| சுன்னாகம் 0764550670 | பண்டத்தரிப்பு 0777718322 | சங்கானை 0777726322 | கோப்பாய் 0764550674 | புத்தூர் 0764550671 | [illegible] 0777720322 |
| நெல்லியடி 0776699892 | V2 Travels | | வேலணை 0743900353 | பருத்தித்துறை 0768226230 | வல்வெட்டித்துறை 0776697960 |

## விற்பனைக்கு

மரவள்ளி சீவும் மெசின் விற்பனைக்கு (Original)

(2249)

தொடர்பு 077 623 7956

## காணி விற்பனைக்கு

சேந்தான்குளம் இளவாலை வீதியில், சேந்தான்குளம் சந்தியில் இருந்து 200m தூரத்திலும், பிரதான வீதியில் இருந்து 150m தூரத்திலும்.

- 18 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
- தரகர் தேவையில்லை.
- ஒரு பரப்பின் விலை :- 600,000/-

(2215)

**077 368 4579, 077 148 9278**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.10.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.